05th November 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 04 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

உள்ளே...













# ஹமாஸ் உக்கிர தாக்குதல்

# திணறும் இஸ்ரேல் படைகள்

## இஸ்ரேல் நகரங்கள் மீதும் தொடர் தாக்குதல்

## பதிலுக்கு காஸாவில் இஸ்ரேல் காட்டுமிராண்டித்தனம்

பலஸ்தீன் இஸ்ரேல் யுத்தத்திற்கு இன்னும் இரண்டு நாட்களில் ஒரு மாதம் பூர்த்தியாகும் நிலையில் இருதரப்பிலும் மிகவும் மும்முரமாக யுத்தம் இடம்பெற்று வருவதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. காஸாவில் ஹமாஸ் மேற்கொள்ளும் தாக்குதல்களை முறியடிக்க முடியாத நிலையில் இஸ்ரேல் படையினர் பல இடங்களில் பல இழப்புகளை

02ம் பக்கம்பார்க்க...

# அமைச்சரவையை மாற்றுவதுபோல் கிரிகெட் நிர்வாகத்தை மாற்ற முடியாது

## சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்




கிரிக்கெட் விளையாட்டு இன்று சக்தி வாய்ந்தவர்களின் ஆடுகளமாக மாறி,பணம், கப்பம்,அரசியல் மயமாக்கல் போன்றவற்றின் மூலம் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதால் அது வீழ்ச்சியடைந்துள்ளதாகவும்,

இதற்கு தற்காலிக தீர்வுகள் தேவையில்லை என்றும்,நிலையான நீண்ட கால தீர்வுகள் தேவை என்றும்,ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் பிழைப்புக்காக அமைச்சரவையை பொய்யாக மாற்றுவது போன்ற

02ம் பக்கம்பார்க்க...

# 1967 இல் ஒதுக்கப்பட்ட எல்லைகளே வேண்டும்

## எர்துகான் வலியுறுத்து



எர்துகான் தலைமையில் துருக்கி, ஹமாஸ் ஆதரவு நிலையை எடுத்துள்ளது

1967ல் வகுக்கப்பட்ட எல்லைகளே அங்கு இருக்க வேண்டும்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்துகிறோம்.

02ம் பக்கம்பார்க்க...

# காஸாவிலிருந்து வந்த பதினொரு இலங்கையர்கள்

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக காஸா பகுதியில் சிக்கியிருந்த நிலையில், எகிப்தின் ரஃபா நுழைவாயில் ஊடாக வெளியேறிய 11 இலங்கையர்களும் நாடு திரும்பியுள்ளனர்.

கட்டாரின் தோஹாவில் இருந்து விமானம் மூலம்

02ம் பக்கம்பார்க்க...




# பலஸ்தீன் ஆதரவு கூட்டம் செவ்வாயன்று ஹைட்பார்க் இல்

## முழு ஆதரவு என ஹக்கீம் அறிவிப்பு

எதிர்வரும் 7ஆம் திகதி ,செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு , ஹைட்பார்க் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன மக்களுக்கு

02ம் பக்கம்பார்க்க...

# ஜனாதிபதியிடம் 4 கோரிக்கைகளை முன்வைத்துள்ள பொதுஜன பெரமுன

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நான்கு விசேட கோரிக்கைகளை முன்வைத்து, உடனடியாக அமுல்படுத்துமாறு கோரியுள்ளது.

சமுர்த்தி மானியத்தை தொடர வேண்டும், உர மானியத்தை தொடர்ந்து வழங்க வேண்டும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பரவலாக்கப்பட்ட ஒதுக்கீட்டை

02ம் பக்கம்பார்க்க...

# மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் ஹிஸ்புல்லாவிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பு



முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவினால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்டு, 4 வருடங்களின் பின்னர், மீண்டும் அதனை ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்

02ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ∴பிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை


## அமைச்சரவையை...

(முன் பக்கத் தொடரச்சி)

பொய்யான சூழ்ச்சிகளால் கிரிகெட் நிறுவனத்தில் அங்கத்தவர்களை மாற்றி கிரிக்கெட்டை காப்பாற்ற முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த திருத்தங்கள் உண்மையாகவும், யதார்த்தமாகவும்,நடைமுறை ரீதியாகவும் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும்,எந்த ஒரு அரசியல்வாதியும் எந்த விளையாட்டு சங்கத்திலும் பதவிகளை வகிக்க அனுமதிக்கக் கூடாது என்றும்,தொழில்முறை விளையாட்டுகளில் ஈடுபட்டு வென்ற வீரர்களுக்கு விளையாட்டுத் துறை நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், இவ்வேளையில்,

இவ்வாறான வீரர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு,முதலாளிகளின் அரசியல் பலத்தினாலும்,சதி பலத்தினாலும் விளையாட்டானது பாழாகியுள்ள நிலையில்,தற்காலிக தீர்வில்லாத நிரந்தரத் தீர்வே தேவையாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அரசாங்கம் பல விடயங்களில் தவறான செயல்களை செய்து வருகிறது என்றும், கிரிக்கெட்டை அழித்த சக்திகளைக் கூட பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின் குறிப்பிட்ட தரப்புகள் செயற்பட்டு வருகின்றன என்றும், ஊழல் காரணமாகவே சாம்பியன் பட்டம் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணியால் இந்த ஆண்டு உலகக் கோப்பைக்கு தகுதி பெற முடியாது போனதாகவும்,நமது நாடும் இவ்வாறானதொரு நிலைக்கு சென்று விடக்கூடாது என்றும்,இதற்கு இனம்,மதம், சாதி,வர்க்கம்,கட்சி வேறுபாடின்றி தகுதியானவர்கள்,திறமையானவர்கள் கிரிக்கெட் நிர்வாகத்தில் அமர்த்தப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதியிடம்...

(முன் பக்கத் தொடரச்சி)

மீள வழங்க வேண்டும், அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பின் போது வேலைவாய்ப்பை இழக்கக்கூடாது என்பனவே நான்கு கோரிக்கைகளாகும் என கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் செயலாளரின் கையொப்பமிடப்பட்ட கடிதத்தில் இந்த நான்கு கோரிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான சிறந்த பொறிமுறை சமுர்த்தி இயக்கம் எனவும், எனவே இயக்கத்தின் பெயரை மாற்றுவது பொருத்தமானதல்ல எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## மட்டக்களப்பு...

(முன் பக்கத் தொடரச்சி)

தொண்டமான் சம்பிரதாயபூர்வமாக நேற்று சனிக்கிழமை (04) புனாணையில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் வைத்து ஏ.எல். எம். ஹிஸ்புல்லாவிடம் கையளித்தார்.

மட்டக்களப்பு புணானையில் 400 ஏக்கர் நிலப்பரப்பில் தனியார் பல்கலைக்கழகத்தை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நிர்மாணித்து வந்துள்ள நிலையில், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர், அதனை அரசாங்கம் கையகப்படுத்தியது.

அதனை தொடர்ந்து, இராணுவ பாதுகாப்பில் இருந்து வந்த பல்கலைக்கழகத்தை இராணுவத்தினர் கொரோனா நோய்க்கான சிகிச்சை முகாமாக பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் கல்வியினை மேம்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகத்தை வழங்குமாறு ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய, இதனை மீண்டும் ஹிஸ்புல்லாவிடம் வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கிழக்கு மாகாண ஆளுநருக்கு ஆலோசனை மற்றும் பணிப்புரை வழங்கப்பட்டது.

அதன் பின்னரே, இந்த தனியார் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் உரியவரிடம் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துகொண்டு பல்கலைக்கழக திட்டங்களை கேட்டறிந்ததோடு, கற்றல் பகுதிகளை சென்று பார்வையிட்டார்.

பின்னர், குறித்த பல்கலைக் கழகத்தின் திறப்பை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஹிஸ்புல்லாவிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

## காஸாவிலிருந்து...

(முன் பக்கத் தொடரச்சி)

இன்று (05) அதிகாலை குறித்த அனைவரும் நாடு திரும்பியுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸாவில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் கடந்த 3ஆம் திகதி எகிப்துக்கு வந்ததாக பலஸ்தீனத்தில் உள்ள இலங்கை பிரதிநிதி அலுவலகம் தெரிவித்திருந்தது.

அவர்கள் அனைவரும் ரஃபா நுழைவாயில் வழியாக எகிப்துக்கு வந்து எகிப்தில் உள்ள ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

17 இலங்கையர்கள் காஸா பகுதியில் சிக்கியிருந்த நிலையில், அவர்களில் நால்வர் பாதுகாப்பின்மை காரணமாக அங்கிருந்து வெளியேற முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹமாஸ்...

(முன் பக்கத் தொடரச்சி)

எதிர்கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் ராணுவ ரீதியாக பலத்த தோல்வியை சந்திக்கின்றது. ஹமாஸ் அமைப்பு அதனுடைய ராணுவத்திலிருந்து ராணுவ பிரிவான இஸ்ஸதீன் அல்கஸ்ஸாம் படைப்பிரிவு முன்னேறும் இஸ்ரேல் ராணுவத்தை பல நாட்களாக ஒரே புள்ளியில் தக்க வைத்து உலகை ஆச்சரியப்படுத்தியுள்ளது. அதேவேளை பலமுறை இஸ்ரேல் காஸா எல்லையை தாண்டி இஸ்ரேலின் பல இடங்களில் தாக்குதல் நடத்தி இருப்பதோடு அதனூடாக பல்வேறு இஸ்ரேலிய ராணுவத்தை கொலை செய்ததோடு முகாமிற்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. நேற்று காலை கூட சிக்ரின் படை தளத்தினுள் பல ஹமாஸ் போராளிகள் நுழைந்து பலத்த தாக்குதல் நடத்துவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை நேற்று தென் லெபனானில் முதன்முதலாக ஹிஸ்புல்லா கெரில்லாக்கள் புதுவகையான ஆயுதங்களை பயன்படுத்தி இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்தி உள்ளதோடு ஆக்கிரமிப்பிற்கு எதிராக தொடர்ந்து போராடுவதாக ஹிஸ்புல்லாவின் செயலாளர் ஹசன் நஸ்ருல்லா அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈரானிய வெளிவிவகார அமைச்சர் நேற்று அமெரிக்காவுக்கு விடுத்துள்ள கடும் எச்சரிக்கையில் உடனடியாக அமெரிக்கா தன்னுடைய ஆக்கிரமிப்பிற்கு எதிரான ஆதரவை நிறுத்த விட்டால் அமெரிக்கா பிராந்தியத்தில் பலத்த இழப்பை ஏற்க வேண்டிவரும் என்று கடுமையான தொனியில் அமெரிக்காவை எச்சரித்துள்ளது.

அதேபோன்று நேற்று ஹமாஸினுடைய ராணுவ பிரிவு இஸ்ரேலினுடைய தொழில்முக நகரத்தின் மீது அய்யாஷ் 250 என்ற ஏவுகணையை ஏவி இருக்கின்றது. அந்த ஏவுகணையை சுட்டு வீழ்த்துவதற்காக மட்டும் இஸ்ரேல் ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான ஏவுகணையை பாவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கின்றது. இஸ்ரேலியினுடைய பொருளாதாரம் ஐம்பது வீதம் சரிந்துள்ளதாக கூறுகின்ற அதேவேளை பல இஸ்ரேலிய மக்கள் இப்போது நெதன்யாகுவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்திருக்கின்றது. தற்பொழுது ஹமாஸ் மிக திட்டமிட்டு வெளியிடும் காணொளிகளை பார்வையிடும் இஸ்ரேலிய ராணுவத்திடையே பதட்டம் அதிகரித்திருக்கும் அதே வேளை காஸாவிற்கு சென்றால் மரணம் நிச்சயம் என்ற செய்தியை இஸ்ரேலிய பொது மக்களிடையே ஏற்படுத்தியிருக்கின்றது. இதே வேளை ஈராக்கில் உள்ள அமைப்புகள் தொடர்ந்தும் அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்தி வருவதோடு இந்த வாரம் அந்த தாக்குதல்களை பல மடங்கு அதிகரித்துள்ளதாக கடுமையான எச்சரிப்புகள் செய்துள்ளது.

அவ்வாறு எச்சரிக்கை விடுத்து 22 மணி நேரத்திற்குள் சரியாக சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களை மீண்டும் ஒருமுறை தாக்குதலுக்கு உட்படுத்தியுள்ளது. அமெரிக்காவினுடைய பல யுத்தத்தாங்கி கப்பல்கள் வந்திருக்கின்ற இந்த நிலைமையில் துருக்கி தன்னுடைய முழுமையான இஸ்ரேலினுடைய தொடர்புகளை துண்டிப்பதற்கு முன்பு இஸ்ரேலிய தூதுவர்களை தனது நாட்டிலிருந்து வெளியேற்றி இருப்பதோடு இஸ்ரேலில் உள்ள தமது தூ தர்களை மீள வரவழைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு பல நாடுகள் தூதுவர்களை வரவழைத்து இருக்கின்றது முக்கியமானது. யுத்த தோல்விகளை கடுமையாக சந்தித்து வரும் இஸ்ரேல் தொடர்ச்சியாக இதுவரை கடந்த 48 மணி நேரத்தில் 5 வைத்தியசாலைகளையும் மூன்று அகதி முகங்களையும் ஒரு பாடசாலையையும் தாக்கி பொதுமக்களை கொலை செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இதனூடாக காஸா மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தி காஸா மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக முயற்சி நடைபெற்றாலும் இதுவரை ஒரு குடிமகன் கூட வெளியேறாமல் காஸா மக்கள் உலகத்துக்கு ஒரு புதிய செய்தியை சொல்லி வருவதானது உலக மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது.

குறிப்பாக ஹமாஸிடம் காணப்படக்கூடிய இந்த தயாரிப்புகள் எங்கிருந்து வந்தன? எவ்வாறு போராடுகின்றன?என்பது தொடர்பில் இஸ்ரேலிய அமெரிக்க ஆய்வாளர்கள் மட்டுமின்றி பல்வேறு ஆய்வாளர்கள் இது தொடர்பில் ஆராய்ச்சி செய்து வருகின்றன. ஏனெனில் அவர்களுடைய இந்த ராணுவப்பலம் சற்றும் எதிர்பார்க்காத ஒன்றாக காணப்படுகின்றது. இதேவேளை அமெரிக்காவினுடைய பாதுகாப்பு செயலாளர் ஹமாஸ் பல வருடங்களுக்கு தேவையான ஆயுதங்களையும் தயாரிப்புகளையும் செய்து வைத்திருப்பதால் இந்த யுத்தம் நீண்ட காலம் எடுக்கும் என குறிப்பிட்டு இருப்பது மிகவும் முக்கியமானது.

## 1967...

(முன் பக்கத் தொடரச்சி)

இந்த போர் முடிந்ததும் காசாவில் அமைதியையும், அது ஒரு சுதந்திர பாலஸ்தீனதின் ஒரு பகுதியாகவும் இருப்பதை பார்க்க விரும்புகிறோம். கிழக்கு ஜெருசலேம் நகரை தலைநகராக கொண்டு 1967ல் வகுக்கப்பட்ட எல்லைகளே அங்கு இருக்க வேண்டும். பாலஸ்தீனர்களின் வாழ்வை இருள செய்யும் எந்த முடிவையும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம். இது குறித்த பேச்சு வார்த்தைகளில் துருக்கி ஈடுபட்டாலும், நெதன்யாகுவை ஆதரிக்க போவதில்லை. இஸ்ரேல் நடத்திய போர் குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் இஸ்ரேலை பொறுப்பாக்குவோம். இஸ்ரேலை ஆதரித்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் எங்கள் நம்பிக்கையை இழந்து விட்டது - இவ்வாறு எர்டோகன் கூறினார்.

## பலஸ்தீன்...

(முன் பக்கத் தொடரச்சி)

இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக உலக நாடுகளின் ஆதரவைக் கோரும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஏனைய கட்சிகளுடனும், அமைப்புக்களுடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் பங்கு பற்றி முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென கட்சியின் தலைவர்,பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அத்துடன், இன,மத,மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் அல்லலுறும் பலஸ்தீனர்களின் விமோசனத்திற்காக அணிதிரளுமாறு நாட்டுமக்களுக்கு அவர் வேண்டுகோளொன்றையும் விடுத்துள்ளார்.

இதனை ஏற்பாடு செய்து வரும் ”வீ ஆர் வன் ”("We are One")என்ற அமைப்பின் தலைவர் சுரேன் சந்திரவுடன், உலமாக்கள் உட்பட கட்சியின் ”தாருஸ் ஸலாம்”தலைமையகத்தில் புதன்கிழமை (1) மாலை தம்மைச் சந்தித்து கலந்துரையாடியவர்களிடம் அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஏனைய பல கட்சிகளின் தலைவர்களும் ,முக்கியஸ்தர்களும்இதில் பங்கெடுக்க இருப்பதாகவும் கூறப்பட்டது. முக்கியமாக, பௌத்த, இந்து, இஸ்லாம் ,கத்தோலிக்க கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்த மதப் பெரியார்கள் பலரும் இதற்கு ஒத்துழைக்க இணக்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவரும்,ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட, மு.கா.தலைவர் ஹக்கீம், அவரது வருகையை உறுதிப்படுத்தினார். அத்துடன், அது பற்றிய குறுந் தகவலொன்றையும் சஜித் உடனடியாகவே ஹக்கீமுக்கு இட்டிருந்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு மத்திய குழுவின் தலைவர் அர்ஷாத் நிசாம்தீனுடன் அதன் உறுப்பினர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்ததோடு,இதற்கு ஒத்துழைப்பது பற்றிய பயனுள்ள கருத்துக்களையும் தலைவருடனும், வந்தவர்களுடனும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

# மருந்து வகைகளை இலங்கைக்கு உதவியாக வழங்கவுள்ள பங்களாதேஷ்

பங்களாதேஷ் இலங்கைக்கு 58 ஆயிரம் டொலர் பெறுமதியான மருந்து வகைகளை உதவியாக வழங்கவுள்ளது.

இலங்கைக்கு நிதி நெருக்கடி ஏற்பட்ட போது முதன் முதலாக இலங்கைக்கு 200 மில்லியன் டொலரை கடனாக வழங்கிய பங்களாதேஷ், இப்போது இலவசமாக மருந்துப் பொருட்களை வழங்குவதற்கு தீர்மானித்திருக்கின்றது. பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் எம் ஆரிபுல் இஸ்லம் இன்னும் ஓரிரு வாரங்களில் இந்த உதவி கிடைக்குமென்று தெரிவித்துள்ளார்.

இதில் தேவைப்படும் அத்தியாவசிய 54 மருந்து வகைகள் இந்த உதவித் தொகையில் உள்ளடங்கியிருப்பதாகவும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய சுகாதார அமைச்சர் டாக்டர் ரமேஷ் பதிரனவுக்கும், பங்களாதேஷ் உயர் ஸ்தானிகருக்குமிடையில் சுகாதார அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது உயர்ஸ்தானிகர் இதனை தெரிவித்தார்.

இதேநேரம் நாட்டில் காணப்படும் மருந்துப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு பங்களாதேஷ் அரசுடன் இணைந்து புதிய வேலைத்திட்டமொன்று தயாரிக்க உத்தேசித்திருப்பதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.











# அனுர குமாரவின் நிலைப்பாட்டுக்கு லொஸ்ஏன்ஜல்ஸில் வாழும் இலங்கை முஸ்லிம்கள் பாராட்டு

**(எஸ்.ஏ. சுஃப்யான்)**

ஈஸ்டர் தாக்குதலின் பின்னும், கொரோனா தொற்றின் பின் முஸ்லிம் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வது தொடர்பாக ஜாதிக ஜனபலவேகய தலைமைத்துவம் எடுத்த நிலைப்பாடு குறித்து அதன் தலைவர் அனுர குமார திசாநாயக்கவுக்கு லொஸ்ஏன்சல்ஸ் வாழ் முஸ்லிம்கள் நேரடியாக நன்றி தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா சென்றிருந்த அநுர குமார திசாநாயக்க லொன்ஏன்ஜல்ஸ் நகரில் நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பின்போது கேள்வி எழும்பும் சந்தர்ப்பத்தில் லொஸ்ஏன்ஜல்ஸில் புலம் பெயர்ந்து வாழும் பைசல் புஹாரி இவ்வாறு நன்றி தெரிவித்துள்ளார்.

பெயர்:- பைசல் புஹாரி, தொழில் : பொறியியலாளர், முஸ்லிம் என்ற வகையில் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஈஸ்டர் தாக்குதலின் பின் நீங்கள் எடுத்த நிலைப்பாடு, கொவிட் தொற்றின் பின் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வது தொடர்பாக எடுத்த நிலைப்பாட்டுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். கலிபோனிய முஸ்லிம் இயக்கத்தின் தலைவரும் இங்கு இருக்கின்றார். எமது நன்றியைத் தெரிவிக்கவே நான் உரையாற்றினேன் என்று பைசல் புஹாரி தெரிவித்தார்.

இதற்கு தனது உரையின்போது பதிலளித்த அனுர குமார திசாநாயக்க கூறியதாவது:-

எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய ஐக்கியம் அவசியம். எமது நாட்டில் மக்களிடையே ஐக்கியமில்லாமல் இல்லை. மக்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியது பிற்போக்கு அரசியல்வாதிகளாகும். அவர்களது இருப்பு இனவாதத்திலேயே தங்கியிருந்தது. நான் ஒரு உதாரணத்தைக் கூறுகின்றேன்.

2017ஆம் ஆண்டின் பின்பு ராஜபக்ஷ முகாம் அதிகாரத்தை இழந்தபின் இலங்கையின் அகராதிக்கு புதிய சில வசனங்கள் வந்தன. மீண்டும் புலிகள் எழும்புகிறார்கள். உங்களுக்கு நினைவிருக்கின்றது. ஆனால் 2016 - 17 ஆம் ஆண்டு அவற்றைக் கைவிட்டார்கள். எனக்கு நினைவிருக்கின்றது. பன்டாரவளையில் பஸ் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்தது. இராணுவ உத்தியோகத்தர்களது குண்டு அது. ஆனால் அரசியல்வாதிகள் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் பயணம் இந்த குண்டுடன் ஆரம்பிக்கின்றது என்று கூறினார்கள். ஆவாக்குழு என யாழ்ப்பாணத்தில் ஒரு குழு உருவாகியுள்ளது. இந்த இயக்கத்தின் செயற்பாடு இந்த குண்டுவெடிப்புடன் ஆரம்பமாகிறது என்று கூறினார்கள். ஆனால் 2016-17 ஆகும் போது புலிகள் தலைதூக்கிவிட்டதாகக் கூறும் கதையில்லை. புலிவாலை தேடிக் கொண்டிருந்தார்கள்.

2019ஆம் ஆண்டு புலிகள் எழுச்சி தோற்கடிக்கப்படவேண்டுமென்று வாக்களிக்கவில்லை. புலி வால்களை தேடிக்கொண்டிருந்தார்கள். இஸ்லாமிய தீவிரவாதத்தை போசிக்க அதனை விடச் சிறந்தது என்று கருதினார்கள். இதன் பின் புலிகள் பற்றி பேசவில்லை.

மலடாக்கும் கொத்து, மலடாக்கும் ஆடைகள், மலடாக்கும் டாக்டர்கள் பற்றிப் பேசினார்கள். 2050 ஆகும்போது சிங்கள இனம் சிறுபான்மையாகவும், முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும் மாறும் என்றார்கள். 2019 ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றது. அதன் பிறகு சிங்கள இனத்துக்கு ஆபத்து என்று பேசினார்கள். அதன் பிறகு சிங்கள இனத்துக்கு ஆபத்து என்று இருக்கவில்லை. அதனை அவர்கள் உருவாக்கினார்கள். சிங்கள இனத்தைப் பாதுகாக்கும் அபேட்சகர் ஒருவர் தேவை என்றார்கள். கோத்தாபயவின் இமேஜ் யுத்தம் முடிவாகும்போது பாதுகாப்புச் செயலாளர் பாதுகாப்புத் தொடர்பாக பெரும் பங்களிப்புச் செய்ததாகக் கூறினார்கள். பாதுகாப்புப் பற்றி இப்போதும் அவ்வாறான ஒன்று தேவைப்படுகின்றது என்றார்கள்.

ஈஸ்டர் தாக்குதலின் பின் 25ஆம் திகதி தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக கோத்தாபய கூறினார். முஸ்லிம் தீவிரவாதத்தைத் தோற்கடிப்பதாக கூறினார்கள். அது எப்படி நடந்தது என்பதில் மிகவும் தெளிவாக உள்ளார். சஹ்ரானுடன் ராஜபக்ஷ அமர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தினார்கள் என்று நான் கூறவில்லை. இந்த அளவுக்கு குருடாகவேண்டியதில்லை. அவர்களுக்கு ஒரு வால் கிடைத்தது. இனவாதம் என்பது எப்போதும் பொதுமக்களிடம் இருக்கவில்லை. பிற்போக்கு அரசியல்வாதிகள் தமது அதிகாரத்துக்காக இனவாதத்தை விதைப்பார்கள்.

ஆனால் ஜாதிக ஜனபலவேகய ஒபோதும் மிகவும் கடினமான சந்தர்ப்பத்தில் கூட இனவாதத்தை நிராகரித்தே செயற்பட்டது.

தினமும் தேசிய பத்திரிகையொன்றில் பிரதான செய்தியாக எட்டாயிரம் சிசேரியன் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது. நாலாயிரம் மலட்டுச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது என்று கூறிவந்தது. நான் பாராளுமன்றத்தில் டாக்டரின் வயது என்ன என்று கேள்வி எழுப்பினேன். இவ்வளவு காலம் வேலை செய்துள்ளார். மணித்தியாலத்திற்கு எத்தனை சத்திர சிகிச்சைகள் செய்துள்ளார். இது பிழையான செய்தி என நாம் கூறினோம். அவ்வாறு நடக்க முடியாது. அப்போது எனது புகைப்படம் சமூக ஊடகத்தில் பிரசுரமானது முஸ்லிம்களது தொப்பி அணிந்த ஹம்பயா என்று. இன ஐக்கியத்தின் கொடியை விடமாட்டோம். கறுப்பு, வெள்ளை பேதமுள்ள அமெரிக்காவின் கறுப்பின ஒருவர் ஜனாதிபதியானார்.

பிரித்தானியாவில் பிரதமராக இந்திய வம்சாவளி ஒருவர் தெரிவானார். காலஞ்சென்ற ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஒருமுறை என்னிடம் கூறினார். அவர் கத்தோலிக்க தமிழர் என்றும், எனக்கு அமைச்சராக மட்டுமே வரலாம். இது நீதியானது அல்ல. இன, மத, குலம் அதற்கு தடையாக இருக்கக்கூடாது என்றும் திசாநாயக்க தெரிவித்தார்.

# நௌசர் பௌசியின் ஏற்பாட்டில் 5 பாடசாலைகளுக்கு புதிய கட்டடங்கள்



முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் நௌசர் பௌசியின் ஏற்பாட்டில் டுபாய் ஸைதா பவுண்டேசனின் நிதியுதவியுடன் கொழும்பு மாநகரிலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு வியாழனன்று அடிக்கல் நட்டப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, நௌஸர் பௌசி உட்பட கல்வியமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஒரே நாளில் இடம்பெற்ற ஐந்து நிகழ்வுகளில் அடிக்கல் நட்டப்பட்டது.



மட்டக்குளி சேர் ராசிக் பரீத் மகளிர் கல்லூரிக்கு 52 இலட்சம் ரூபாவும், கொட்டாஞ்சேனை பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்துக்கு 90 இலட்சம் ரூபாவும், மட்டக்குளி ஹம்ஸா கல்லூரிக்கு 34 இலட்சம் ரூபாவும், பண்டாரநாயக்க மாவத்தை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு 32 இலட்சம் ரூபாவும், சென் செபஸ்தியன் சிங்கள வித்தியாலயத்துக்கு 50 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

(படங்கள் - நவாஸ் ஹம்ஜதீன்)

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 NOVEMBER 05 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# வரலாறு காணாத மிகப்பெரும் இன அழிப்பை காஸா மீது கட்டவிழ்த்துள்ள இஸ்ரேல்

வரலாறு காணாத மிகப்பெரும் இன இழிப்பை காஸா மீது இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டுள்ளது. 9 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து, 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தும் இன்னும் சாவுதேச சமூகத்தினால் இஸ்ரேலை கட்டுப்படுத்த முடியவில்லை.

மேய்ப்பாளர் இல்லாத ஆட்டுமந்தை போல, முஸ்லிம் நாட்டுத் தலைவர்கள் அங்கும் இங்குமாக சிதறுண்டுள்ள நிலையில், உலகின் ஒரு சிரிய பகுதியில் இரக்கமின்றி இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை தடுக்கும் வல்லமையை இழந்து முஸ்லிம் சமூகமும், மனிதாபிமானத்தை நேசிக்கும் சக்திகளும் நிலை தடுமாறி நிற்கின்றன.

ஈரான் குறிப்பிடுவது போன்று இஸ்ரேலினால் தனித்து நின்று தாக்குப்பிடிக்க முடியாது என்பது உண்மைதான். அதனால் உலக வல்லரசு உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலுக்கு பக்கபலமாக நிற்க, ஹமாஸ் ஆயுததாரிகளை நசுக்குகிறோம் என்ற போர்வையில் காசா மீதான போர் சர்வதேச சட்டங்களை மீறி, வெகுஜன அபிப்பிராயங்களை புறந்தள்ளி தொடருகிறது.

இந்நிலையில் அப்பாவி காசா மக்களின் உயிரிழப்புகள் நிறுத்தப்பட வேண்டுமாயின், இஸ்ரேலுக்கான அழுத்தங்கள் அதிகரிக்கப்பட வேணடும். இதனை உடனடியாக செய்வதே தற்போதைய தேவையாகும்.

அதனை அரபுலம், சர்வதேச நாடுகள் என உரிய தரப்பினர் தலையிட்டு இதற்கு முடிவுகட்ட உடனடியாக முன்வர வேண்டுமென மனிதாபிமானத்தின் பெயரால் அழைப்பு விடுக்கிறோம்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) "உதயம்"
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...
அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS
DIPLOMA PROGRAMS
TVEC REGISTERED INSTITUTE
Counseling & Psychology
Teacher Training
Business Management
Spoken English
AMI Montessori
Child Psychology
IT Programs
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907
HND (UK) PROGRAMS
International Professional Academy, UK
www.ipauk.org.uk
HND (UK) in Business Management
HND (UK) in Computing
HND (UK) in Teacher Training
HND (UK) in Psychology
HND (UK) in English
CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032
TOP UP DEGREE PROGRAMS
UGC APPROVED
Bachelors in Psychology
Bachelor of Education
BBA / MBA
BA in English
BSC IT
CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032
AMAZON COLLEGE
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

# பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் ஜனவரி முதல் மத்ரஸாக்களில் பாடத்திட்டம்!



அனேகமான சமூக வலைதளங்கள் தாம் வீரர்கள் என்ற தோரணையிலேயே செயற்படுகின்றன. எதை எடுத்தாலும் தமது பக்கங்களை மாத்திரம் தீர்மானித்து செய்திகளையும் தகவல்களையும் வெளியிடுகிறார்கள் என முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் இசட்.ஏ.எம். பைசல் தெரிவித்தார்.

பஹன ஊடக நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் முஜீபின் வழிகாட்டலில் பஹன அக்கடமி முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய உலமா ஜெர்னலிஸம் என்ற மகுடத்திலான உலமாக்களை வலுவூட்டும் 3 நாள் பயிற்சிக்கருத்தரங்கின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா தெல்தொட்டைக்கிளையின் ஒத்துழைப்பில் மஹ்பலுல் உலமா அரபு கலாசாலையில் சமூக மாற்றத்துக்காக அறிவூட்டும் இப்பயிற்சிக்கருத்தரங்கு ஒக்டோபர் 27 முதல் 29 வரை நடைபெற்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் திணைக்களப் பணிப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஒரு சிறந்த நிகழ்ச்சியினை மேற்கொண்டு இறுதிக் கட்டத்தில் இருக்கின்ற இந்த நிகழ்வுக்கு என்னையும் அழைத்த ஏற்பாட்டுக் குழுவிற்கும், பஹன மீடியா நிறுவனத்திற்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பஹன அகடமியின் பணிப்பாளர் அவர்கள் தமது உரையில் இந்தப் பாடத்திட்டத்தை தயாரித்து முதன் முதலாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்துக்கு வந்து என்னை சந்தித்ததாகக் குறிப்பிட்டார்.

அன்றைய நாள் எனக்கு மிகவும் சந்தோஷமான நாளாக இருந்தது. இருந்த வேலைப்பளு காரணமாக ஒரு சில வாரங்களை நான் அவர்களிடம் கேட்ட போதும்,

அன்றைய தினமே நான் அவரிடம், இன்ஷா அல்லாஹ் நாடளாவிய ரீதியில் இதனை மேற்கொள்வதற்கு எங்களுடைய திணைக்களம் ஒத்துழைப்பு வழங்க எந்த நேரமும் ஆயத்தமாக இருக்கின்றது எனக் கூறினேன்.

இவ்விடத்திலும் நான் அதை மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் இந்த நிகழ்ச்சியினை எல்லா மாகாணங்களிலும் எல்லா மாவட்டத்திலும் செய்வதற்கான பூரண ஒத்துழைப்பை எங்கள் திணைக்களம் தரும் என்பதை மீண்டுமொருமுறை கூறிக்கொள்கிறேன்.

இந்த நிகழ்வை ஆரம்பிப்பதற்காக இங்கு ஓதுவதற்கு மிகப் பொருத்தமான குர்ஆன் வசனத்தை தேர்ந்தெடுத்து இருக்கின்றீர்கள்.

உங்களுக்கு கிடைக்கக்கூடிய தகவல்களை பூரணமாக நம்பி உங்களுக்கு இன்னொருவரிடம் கூற முடியாது. அதனைத் தீர விசாரிக்க வேண்டும். சரியானதை மாத்திரம் கூறவேண்டும்.

இன்று இலங்கையில் காணப்படும் அநேகமான சமூக ஊடகங்கள் எல்லாவற்றிலும் அவர்கள் தான் வீரர்கள் என்ற ஒரு நிலை காணப்படுகிறது. எதை எடுத்தாலும் அவர்களுடைய பக்கத்தை மாத்திரம் தீர்மானித்து சில ஆக்கங்களை வெளியிடுகின்றார்கள்.

மறுமைநாளில் இதற்கு அல்லாஹ்விடம் பதில் கூறித்தான் ஆகவேண்டும் என்ற நிலை அவர்களுக்கு ஏனோ இன்னும் புலப்படவில்லை.

புனித திருக்குர்ஆனை ஓதி அதற்கு மொழிபெயர்த்த அந்த இரு சகோதரர்களும் ஒரு சிறந்த கருத்தை ஆரம்பத்திலேயே தந்தருளினார்கள்.

ஊடகம் என்பது சமநிலையில் இருக்க வேண்டும். சீரானதாக இருக்க வேண்டும். மேலும் தெளிவானதாக இருக்க வேண்டும்.

சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் விசேடமாக முஸ்லிம் சமூகத்திற்கு இருக்கின்ற பெரும் சவால் ஊடகம் தான்.

தற்போது வளைகுடாவில் நடைபெறுகின்ற, பாலஸ்தீனத்தில் தாக்குதல் நடைபெறுகின்ற நிகழ்வாக இருக்கலாம்.

ஈராக்கில் நடைபெற்ற நிகழ்வாக இருக்கலாம். நீங்கள் எதை எடுத்து ஆழமாக சிந்தித்துப் பார்த்தாலும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக திட்டமிட்டு இயங்குகின்ற ஒரு பக்கச் சார்பான வெளியீடுகள் காரணமாக பாரிய சவால்களை நாம் எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே அவ்வாறான சவால்களை விளங்கிக்கொள்வதற்கும். அதற்கு மாற்று வழிகளை அமைப்பதற்காகவும் ஒரு சிறந்த தலைப்பை பஹன மீடியா என்ற இந்த நிறுவனம் காலத்திற்கேற்ற வகையில் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் என்ற வகையில் பஹன ஊடக நிறுவனத்தில் இருக்கின்ற சகல ஊழியர்களுக்கும் அதன் தலைவர், பணிப்பாளர் உட்பட சகலருக்கும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கொள்கின்றேன்.

தெல்தோட்டை ஜம்இய்யாவின் தலைவர் அவர்களின் உரையில் மிகவும் வரவேற்கக்கூடிய சிந்திக்கக்கூடிய பல விடயங்களை முன்மொழிந்தார். அதில் நியாயமான தலைப்புக்களில் நாங்கள் இப்போது செயல்பட்டு வருகின்றோம். ஆயினும் இன்னும் அதை எங்களுக்கு அமுல்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

உதாரணமாக பள்ளிவாசல்களில் கடமை புரியும் மௌலவிமார்களுக்கும் கதீப்மார்களுக்குமான ஒரு பயிற்சி. அதேபோன்று பள்ளி பரிபாலன சபைகளில் இருக்கின்ற உறுப்பினர்கள் தலைவர்களுக்கான ஒரு பயிற்சி. இதற்கு நாங்கள் மீட்ஸ் எனும் அமைப்புடன் கலந்தாலோசித்துள்ளோம்.

முதலாவதாக இன்ஷா அல்லாஹ் வருகின்ற நவம்பர் மாதம் 24,25 ஆம் திகதிகளில் எங்களுடைய திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவித்து அவர்களை வளவாளர்களாக பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் இருக்கின்ற பள்ளிவாயல் பரிபாலன சபை அதேபோன்று கதீப் முஅத்தின்மார்களுக்கான பயிற்சியை வழங்குவதற்கும் நாங்கள் திட்டமிட்டு இருக்கின்றோம்.

பாடசாலையை எடுத்துக்கொண்டால் ஆசிரியர்களுக்கு பல வழிகளில் இடைவிடாத பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஆயினும் பள்ளிவாசலில் அதேபோன்று அரபு மதரஸாக்களில், குர்ஆன் மத்ரஸாக் களில் அதைப் பார்ப்பதும் இல்லை. கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றது.

அவர்களுக்கான பயிற்சிகளும் சரியான முறையில் திட்டமிட்ட அமைப்பில் இன்னும் இலங்கை நாட்டில் முன்னெடுக்கப்படவில்லை என்பது கவலைக்கிடமான விடயம்.

இது சம்பந்தமாக துறைசார்ந்த அறிஞர்களிடம் நாங்கள் கலந்தாலோசித்து அதனடிப்படையில் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இலங்கையில் காணப்படுகின்ற சகல அரபு மத்ரசாக்களுக்கும் பொதுவான ஒரே பாடத்திட்டம்.

அமுல்படுத்தப்படும். அதற்கான முயற்சிகளை சகல வழிகளிலும் மேற்கொண்டு வருகிறோம். அந்த அரபு மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டம் பூரணமாக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுகிறது.

உங்களுக்கு தெரியும். 2019 ஆம் ஆண்டு இலங்கையில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட ஒரு கறைபடிந்த நிகழ்வு. அதன் பின்னால் அரபு மத்ரஸாக்கள், குர்ஆன் மதரசாக்கள், சம்பந்தமாக தேடுதல்கள் நடத்தப்பட்டன. அதனடிப்படையில் இந்தப் பாடத்திட்டம் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டு அவர்களும் அதை படித்ததன் பின்னால் அது அமுல்படுத்தப்படும்.

நாங்கள் தயாரித்த அரபு மொழியிலான பாடத்திட்டத்தை அவர்களுக்கு அறபு தெரியாது என்ற வகையில் அதை சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கு நாங்கள் முற்பட்ட பொழுது இருபது இலட்சம் ரூபாய்கள் அதற்கான கூலியாக கேட்கப்பட்டது இருபது இலட்சம் ரூபாய் இருந்திருந்தால் இன்னும் எத்தனையோ வேலைகள் எங்களால் செய்யலாம்.

பிறகு நாங்கள் ஒரு சகோதரனுடன் கதைத்த பொழுது குறைந்த விலையில் அதனை மொழிபெயர்ப்பதற்கு அதற்கான ஏற்பாடுகளை செய்தார். ஒரு நிறுவனம் பூரணமாக அந்த தொகையை எங்களுக்கு தந்து உதவியது.

தற்பொழுது அதன் மொழி பெயர்ப்பு 98 வீதம் முடிவடைந்த நிலையில் உள்ளது.

சகல பள்ளிகளிலும் ஒரு நாளில் ஒரே தலைப்பு எனும் விடயத்தை இன்ஷா அல்லாஹ் இதற்கு அடுத்ததாக நாங்கள் அமுல்படுத்துவதற்கு எண்ணுகிறோம். சென்ற மாதங்களில் நாங்கள் இதில் கூடுதலாக கவனம் செலுத்தினோம்.

மிக விரைவில் அதற்கான அறிவுறுத்தல்களை சகல பள்ளிவாசல்களுக்கும் வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதேநேரம் நேரத்தையும் நாங்கள் வரையறுத்துக் கொடுப்போம். சில பள்ளிவாசல்களில் 45, 50 நிமிடங்கள் இழுப்பார்கள்.


அனேகமான தொழில் செய்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம்தான் வெள்ளிக்கிழமைகளில் சலுகை தந்திருக்கின்றார்கள். அந்த நேரங்களில் அவர்கள் நீண்ட நேர உரைகளைக் கேட்பதன் ஊடாக பகல் சாப்பாடு எடுக்க முடியாமல் மீண்டும் தொழிலுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை. எனவே இந்த நேரக் கட்டுப்பாடு முக்கியம் என்று நாங்கள் கருதினோம். அதன் அடிப்படையில் நாங்கள் தற்பொழுது அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

சான்றிதழ் வழங்கும் இறுதி அமர்வில் உரை நிகழ்த்திய பஹன மீடியா அகடமியின் பணிப்பாளரும் முன்னாள் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பணிப்பாளருமான 'மாத்திய கீர்த்தி' ஹில்மி முஹம்மத் தமதுரையில்,

தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் முஸ்லிம் சமூகம் பல்வேறு அவலங்களை சந்தித்து வரும் இன்றைய காலகட்டத்தில் ஊடகங்கள் மூலம் முஸ்லிம்கள் தொடர்பாக தவறான கருத்துக்களும் பிரிவினைவாத கோட்பாடுகளும் பரப்பப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமையாகவும் பரஸ்பர நல்லெண்ணத்துடனும் வாழ வழிகாட்டும் பாரிய பொறுப்பு உலமாக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

எனவே தான் தூய இலங்கையைத் தோற்றுவிக்கும் இலட்சியப்பாதையில் செயல்பட்டு வரும் நியூஸ்நவ் ஊடகத்தின் பஹன மீடியா நிறுவனம் இப்பயிற்சிக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. இதனைத்தேசிய மட்டத்தில் எடுத்துச்செல்ல முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் நேசக்கரம் நீட்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# பாலஸ்தீன போரின் அச்சுறுத்தும் மேற்குலகின் ரகசிய திட்டம்

உலகையே அச்சுறுத்தும் பாலஸ்தீன, இஸ்ரேல் போர் தற்போது எந்த நிலையில் சென்று கொண்டு இருக்கிறது என்பதை விட அதன் முடிவுகள் எப்படியான ஒரு நிலையை அடையும் என்பது தான் தற்போதைய நேரத்தில் சர்வதேச நாடுகளின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

இந்த போரின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்வதற்கு முன் ஒரு சிறிய ஒப்பீட்டை ஏனைய போர்களுடன் சமன்படுத்தி பார்ப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமையும்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் போர் தற்போது நடந்து கொண்டு இருந்த போதிலும் சர்வதேச நாடுகளின் கவனம் முழுவதும் பாலஸ்தீனம், இஸ்ரேல் போரில் தான் உள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இஸ்ரேல் ராணுவம் காசாவில் நுழைந்து வேட்டையாடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.அதற்கு முன்பாக எந்தவொரு போர் மரபுகளையும் மதிக்காமல் , மனித குலத்தின் மேன்மை மற்றும் உரிமைகளை தனது காலில் கீழே போட்டு மிதிக்கும் உச்சபட்ச அடாவடித்தனத்தை தான் இஸ்ரேலிய இராணுவம் இது வரை செய்து கொண்டு வருகிறது. இனியும் செய்யும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இஸ்ரேல் (யூத) சமூகம் ஒரு மேலாதிக்க மனநிலை கொண்ட சமூகம். வரலாற்றில் யூதர்கள் மிகவும் அதிகமான இழிவை சந்தித்துள்ளதற்கு அவர்களின் சிந்தனை மற்றும் செயல்பாடுகள் தான் இதற்கு காரணமாக அமைந்துள்ளது. இந்த மேலாதிக்க மனநிலை தொடரும் போது யூதர்களின் வீழ்ச்சி மிகப்பெரிய அளவில் இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இது வரை இஸ்ரேலிய இராணுவம் காசாவில் நடத்திய வான்வெளி தாக்குதல் மூலமாக கிட்டத்தட்ட 9,000 க்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகள், முதியோர்களை ஈவு இரக்கம் இல்லாமல் குண்டுகளை வீசி படுகொலை செய்து விட்டனர். மேலும் , இஸ்ரேலிய இராணுவத்தின் 21,000 பொதுமக்கள் ஊனமுற்ற நிலையில் படுகாயமடைந்துள்ளனர். இதோடு தனது உக்கிரமான நடவடிக்கைகளை கைவிட மறுத்து

மருத்துவ மனைகளில் குண்டு வீசி மக்களை கொலை செய்வது, அகதிகள் முகாமில் குண்டு வீசி பொது மக்களை கொலை செய்வது என்கிற அளவில் எல்லை மீறிய படுகொலைகளையும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆலோசனை படி இஸ்ரேலிய இராணுவம் செய்து வருகிறது. இத்தனை படுகொலைகளுக்கும், மூல காரணமான அமெரிக்கா, இஸ்ரேலிய இராணுவததிற்கு நாசகார ஆயுதங்களையும், இராணுவ ஆலோசகர்களையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. மக்களை படுகொலை செய்யும் நோக்கத்தை உறுதிபடுத்தும் விதத்தில் போர் கால நிதியாக 14.2 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கி உள்ளதை நாம் அறிந்து கொள்ள வேண்டிய தருணமாக இது அமைந்துள்ளது. இந்த அநீதிக்கு துணை போன அமெரிக்கா அரச தலைமை தற்போது இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் போர் மரபுகளை மீறக் கூடாது என்று கூறி முதலை கண்ணீர் வடிப்பதை நாம் காண முடிகிறது.

அமெரிக்கா மற்றும் யூத இராணுவத்தின் சதி என்ன என்பது சில நாட்களுக்கு முன்பாக வெளியாகியுள்ளன. அதாவது பாலஸ்தீன மக்களுக்கு எந்தவொரு நிலையிலும் விடுதலை உணர்வை முழுமையாக மழுங்கி போக செய்யும் வகையில் தான் அந்த திட்டம் வடிவமைப்பு செய்யப்பட்டதாக தற்போது பரபரப்பான செய்திகள் வெளியாகியுள்ளன. அந்த திட்டத்தை முழுமையாக செயல்படுத்த இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நல்ல தருணத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் வேலையில் தான் ஹமாஸ் இயக்கத்தினர் அக்டோபர் 7 ந் தேதி மிகவும் கடுமையான தாக்குதலை நடத்தி இஸ்ரேலிய அரசை நிலை குலை செய்து விட்டனர்.

அதாவது, அமெரிக்கா அதிபர் ஜோ பைடன் பேசுவதன் நம்பகத்தன்மை குறித்து நாம் உறுதியாக ஏதும் கூறமுடியாது. அமெரிக்கா அரசு திட்டத்தின் அடிப்படையில் அரபு நாடுகளுக்கு மத்தியில் தனது நம்பிக்கைக்கு உரிய நாடாக இஸ்ரேல் இருக்க வேண்டும் என்று தான் அவர்கள் பெரிதும் நம்புகிறார்கள். மத்திய தரைக்கடல் பகுதியில் தனக்கு மிகச்சிறந்த தோழமையுடன் கூடிய தேசமாக இஸ்ரேலிய அரசும் அவர்களின் ராணுவமும் தொடர்ந்து செயல்படுவதை நாம் தெளிவாக காண கூடியதாக உள்ளது . அமெரிக்காவில் ரீபப்ளிக்கன்( Republic )அரசு பதவியில் இருந்தாலும் அல்லது ஜனநாயக கட்சியின் ( Democrats ) ஆட்சி நடைபெற்றாலும், யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் தான் அமெரிக்காவில் கோலோச்சி வருவது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

அமெரிக்காவில் தொழில்நுட்ப முதலீடுகள், விண்வெளி துறை, ராணுவம், பொருளாதார ஆலோசனைகள், உற்பத்தி துறை சார்ந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் அரசியல் கொள்கை வியூக வகுப்பாளர்கள் என்கிற அடிப்படையில் எல்லா துறைகளிலும் யூதர்களின் ஆதிக்கம் தான் நிறைந்து காணப்படுகின்றது. இந்த நிலையில் யூதர்களின் ஆதிக்கம் இல்லாத ஒரு அமெரிக்க தேசத்தை நாம் கனவில் கூட நினைத்துப் பார்க்க எந்தவொரு நிலையிலும் இடமில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆகவேதான், மத்திய தரைக்கடல் பகுதியில் காசாவிற்குள் இஸ்ரேலிய இராணுவம் காலடியெடுத்து வைப்பதற்கு முன்னரே அமெரிக்கா யூ எஸ் கார்னி, ஜெரால்ட் எஃப் ஃபோர்டு என்கிற இரண்டு நாசகார ஆயுததாரி கப்பல்கள் அந்த பகுதியில் கொண்டு நிறுத்தியது.ஆகவே , பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலிய மோதலில் எந்தவொரு நிலையிலும் அமெரிக்காவை நீதியுள்ள சமரச தேசமாக நாம் ஒரு போதும் எடுத்து கொள்ள முடியாது.

உண்மையில், இஸ்ரேலிய அரச தலைமை பெஞ்சமின் நெதன்யாகும், அவரது இராணுவ சகாக்களும் இன்று மனித சமூகத்தின் விழுமியங்கள் சார்ந்த உலகில் இருந்து தனித்து விடப்பட்ட நிலையில் தான் அவர்கள் பயணித்து வருவதை நம்மால் அவதானிக்க முடிகின்றது.

ஏனெனில், தாங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக தாக்குதலை தொடர்வதாக இஸ்ரேலிய அரச தலைமை சர்வதேசத்திற்கு பொய்யான தகவலைக் பறிமாறிக் கொண்டு உள்ளது. ஆனால், யூத இராணுவம், வெறித்தனமான முறையில் கடும் போக்கை மேற்கொண்டு குழந்தைகள் மற்றும் பெண்களை படுகொலை செய்து வருவதை தான் இன்று உலகம் கண்டு அவர்களுக்கு எதிராக கொதித்தெழுந்த மனநிலைக்கு மாறியுள்ளது என்பதே யாதார்த்தமான உண்மையாகும் . எந்தவொரு சமூகமும் கொள்கை சித்தாந்த ரீதியாக பிரிந்து இருந்தாலும் மனித படைப்பின் தன்மை மற்றும் மனிதநேயம் சார்ந்த நிலைப்பாடுகளில் ஒருமித்து பயணிப்பதை நாம் இந்த போரின் வாயிலாக காணக்கூடியதாக உள்ளது. உண்மையில், இஸ்ரேல் தேசத்தின் தலைநகர் டெல் அவிவ் மற்றும் அமெரிக்காவிலும் ஆயிரக்கணக்கான யூத சமூகத்தை சேர்ந்தவர்கள் ஒன்று திரண்டு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு எதிராகவும், போர் நடவடிக்கைகளின் மூலம் அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்வதையும் கைவிட கோரி மிகக் கடுமையாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துச் செல்வதை காண கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில், இஸ்ரேலிய நாட்டின் கூட்டாளி நாடுகளான பிரான்ஸ், ஜெர்மன், இங்கிலாந்து நாடுகளிலும் பாலஸ்தீன மக்களை படுகொலை செய்வதை நிறுத்து கோரி மிகக் கடுமையான முறையில் ஆர்பாட்டம் நடந்து வருகிறது.

போரில் இஸ்ரேல் வெற்றி பெரும் என்று அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடர்ந்து கூறி வருவது ஒரு தற்குறித்தனத்தின் உச்சகட்ட நிலையாகவே நாம் இதனை எடுத்து கொள்ள வேண்டும்.

9,000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்களை கசாவில் குண்டு வீசி படுகொலை செய்து விட்டு தாங்கள் தொடர்ந்து வெற்றி பெற்று வருவது போல் ஒரு மாய பிம்பத்தை இஸ்ரேலிய இராணுவம் தற்போது ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது. இதனைத்தான் தற்போதைய நிலையில் இஸ்ரேலிய அரச தலைமை செய்ய முடியும் என்பதே உண்மையாகும்.

இஸ்ரேலிய அரசும் அதன் தலைமையும் வெறிபிடித்த நிலையில் (கயயெவளை அழளந) எதனை செய்வது என்கிற தெளிவான பாதை தெரியாமல் தட்டு தடுமாறி வருவதை தான் இந்த போர் நன்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. தங்களின் பிரதான எதிரியாக ஹமாஸ் இயக்கத்தினரை அறிவிப்பு செய்து விட்டது இஸ்ரேலிய அரசும் அதன் இராணுவ தலைமையும் என்பதை நாம் நன்கு அறிவோம். அப்படியெனில், தங்களின் எதிரியை இனம் கண்டு அழிப்பதை தான் அவர்கள் செய்ய வேண்டும். அதற்கு மாறாக, இஸ்ரேலிய இராணுவம் அப்பாவி பொதுமக்கள், குழந்தைகள் வாழும் ஜபாலியா அகதிகள் முகாமில் ஈவு இரக்கம் இல்லாமல் நாசகார குண்டுகளை வீசி, நூற்றுக்கணக்கான பொதுமக்களை படுகொலை செய்து விட்டது இஸ்ரேலிய இராணுவம். இதற்கு காரணமாக ஒரு ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் அந்த முகாமில் இருந்ததாகவும் அவரைப் படுகொலை செய்யவுமே இது போன்ற படுபாதக செயலை இஸ்ரேல் ராணுவம் செய்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்..ஆனால் , இஸ்ரேல் சந்தேகத்தின் படி அடையாளம் காணப்பட்ட ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் அந்த முகாமில் இல்லை என்பதையும், அவர் படுகொலை செய்யப்படும் இல்லை என்று ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் பொது ஊடகங்கள் மூலம் அறிவிப்பு செய்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மருத்துவ மனைகளிலும், அகதிகள் முகாம்களிலும் பலவீனமான நிலையில் உள்ள ஆத்மாக்களை படுகொலை செய்து வரும் இஸ்ரேல் அரச தலைமை இதற்கு விரைவாக பதில் தந்தே ஆக வேண்டும்

இந்த நிலையில் தான் மேற்கத்திய கிறிஸ்தவ மற்றும் யூதர்களின் தெளிவான திட்டம் என்பது காசாவிற்குள் இருந்து முழுவதுமாக பாலஸ்தீன மக்களை அச்சுறுத்தி வெளியேற்றி விடுவது தான் முதல் திட்டமாகும் . இரண்டாவது, அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் உதவியோடு ஹமாஸ் இயக்கத்தின் ஆணி வேரை பிடுங்கி எறிந்து , முற்றிலுமாக அழித்து விடுவதே அதுவாகும். அதன் பின்னர், இந்த மக்களுக்காக போராட எந்த ஒரு இயக்கமும் இல்லாத நிலையில் ஏனைய அரபு நாடுகள் எதனையும் செய்யாமல் வேடிக்கை மட்டுமே பார்ப்பார்கள் என்பதை நன்கு உணர்ந்து தான் இது போன்ற திரைமறைவு திட்டங்களை பெஞ்சமின் நெதன்யாகு அரசு அரங்கேற்றம் செய்து வருகின்றனர்.

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளில் ரகசியமாக உருவாக்கப்பட்ட இந்த திட்டம் தற்போது வெளியாகியுள்ளது.இது தான் ஒட்டுமொத்த, அரபு தேசங்களையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. பொதுவாக, இத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் காசாவில் படுகொலை செய்யப்பட்ட பிறகும் அரபுகளின் பலவீனம், அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாத நிலை இவற்றை நன்கு உணர்ந்து கொண்ட பிறகு தான் இது போன்ற ஆபத்தான திட்டம் உருவாகி உள்ளது . இதனைத் நாம் இங்கே சுட்டி காட்ட விழைகிறோம். இதன் தொடர்ச்சியாக, பாலஸ்தீனம் என்கிற தேசமே இல்லாமல் போகும் போது அங்கு வாழும் மக்களை அயலகத்தில் மெதுவாக குடியேற்றம் செய்து விடுவதும் இதில் அடங்கும். இதற்காக பல்வேறு முயற்சிகளை இஸ்ரேல் அரசு பல்வேறு ரகசிய திட்டங்களை தீட்டி அதனைத் செயல்படுத்த முயல்வது தான் தற்போது நடந்து கொண்டு வருகிறது. அப்படியெனில், பாலஸ்தீன மக்களை வெளிநாட்டிற்கு அனுப்ப அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசம் தான் கனடா உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள சில நாடுகள் என்பதையும் நாம் இங்கு சுட்டி காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய இராணுவம் காசாவின் உட்பகுதியில் புகுந்து மிகவும் கடுமையாக போர் செய்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன . அதேநேரத்தில், சுரங்கப்பாதையில் ஒளிந்து இருந்து ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் ராணுவம் மற்றும் டேங்கர்கள் மீது மிக கடுமையான தாக்குதலை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வீடியோ காட்சிகளை ஹமாஸ் இயக்கம் வெளியிட்டுள்ளது. இஸ்ரேலிய இராணுவம், பல மெக்கோவா (ஆநஉயளய வுயமெநசள) டேங்கர்களை ஹமாஸ் தாக்குதலால் இழந்து வருகிறது. 65 டன் எடையுள்ள இந்த இராணுவ டேங்கர்கள் பல்வேறு தொழில் நுட்ப வசதிகளை கொண்டுள்ளது. பல இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு விட்டனர்.இதனை இஸ்ரேலிய இராணுவத்தின் தலைமை ஒப்புக்கொண்டுள்ளது . இந்த போரின் முடிவில் இஸ்ரேல் மிகப்பெரிய அளவில் பாடத்தை கற்றுக் கொள்ளும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.ஏனெனில் , நன்கு பயிற்சி பெற்ற ஹமாஸ் ராணுவம் தனது சொந்த மண்ணில், தெரிந்த பாதையில் மிக கடுமையாக போராடி வருகிறது . அதேநேரத்தில், வித விதமான நவீன தொழில்நுட்ப ராணுவ தளவாடங்கள், டேங்கர்கள் மற்றும் ஆயுதங்களை தன்னகத்தே கொண்டுள்ள இஸ்ரேலிய இராணுவம் மறுபக்கம் போராடி வருகிறது. இந்த போரின் முடிவு காலம் என்பது ஒரு நீண்ட கால போராக இருக்கும் என்று இஸ்ரேலிய பிரதம அமைச்சர் பெஞ்சமின் நெதன்யாகு தெளிவாக கூறி விட்டார். ஆகவே , இஸ்ரேலிய அரசும், அமெரிக்கா அரச தலைமைக்கும் இந்த போர் அவ்வளவு எளிதான ஒன்றல்ல என்பதை நன்கு உணர்ந்து கொண்டுள்ளதை அவர்களே ஒப்புக்கொண்டுள்ளதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நிலையில், அரபுகள் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக களத்தில் இறங்கி செயல்பட தற்போது வாய்ப்புகள் இல்லாத போதும், தன்னிச்சையாக பல்வேறு இஸ்லாமிய ஜிஹாதிய படைகள் உருவாக அதிக வாய்ப்பு இருப்பதை நாம் மறுக்க முடியாது.இதுதான் ஆப்கானிஸ்தானில் நடந்தது . ஆகவேதான், ஈராக்கில் பலூஜா, மோசூல் பகுதியில் அமெரிக்க பெற்ற அனுபவம் தான் அவர்கள் முழுமையாக நாட்டை விட்டு வெளியேறி விட காரணமாக அமைந்து விட்டதாக சர்வதேச போர் திட்ட வகுப்பாளர்களின் கருத்தாக இருக்கிறது.

நவீன தொழில்நுட்ப கருவிகள் மூலம் ஒரு தேசத்தை கைப்பற்ற முடியும் என்றால் அமெரிக்கா ராணுவம் ஏன் ஆப்கானிஸ்தான், சிரியா, ஈராக்கில் இருந்து தோல்வி முகத்துடன் வெளியேற வேண்டும் என்கிற கேள்விக்கு பதிலை நாம் நன்கு உணர்ந்து கொண்டால் இதற்கு நிச்சயமாக விடை கிடைக்கும்!.

# நவம்பரில் ஆரம்பமாகவுள்ள “கரு சரு வேலைத்திட்டம்



இலங்கை ஐ.நா அலுவலகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வதிவிட ஒருங்கிணைப்பாளர் Marc-André Franche தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சந்தித்து கலந்துரையாடினார்.

தொழில் அமைச்சில் (30) இடம்பெற்ற இந்த சந்திப்பின போது புலம் பெயர் தொழிலாளர்களது சேம நலன்கள் தொடர்பில் தொழில் மற்றும் வெளிநாட்டு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு தெளிவுபடுத்தினார்.

நவீன தொழில் துறை உலகிற்கு ஏற்ப தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் குறித்தும் அமைச்சர் அவரிடம் தெளிவுபடுத்தினார். இதுவரை காலம் புலம்பெயர் தொழிலாளர்கள் .மற்றும் தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் காணப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கை குறித்தும் விளக்மளித்தார்.

இவற்றுக்கு மேலாக, முறைசாரா சேவையில் ஈடுபட்டுள்ளோரின் தொழில் கௌரவத்தை மேம்படுத்துவதற்காக பொது மக்களின் ஆலோசனைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள “ கரு சரு“ என்ற வேலைத்திட்டம் குறித்து சுட்டிக்காட்டிய அமைச்சர், இதன் கீழ் ஊழியர்களின் சேவைத்தரம் மற்றும் கௌவரம் அங்கீகரிக்கப்படவிருப்பதாக அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பில் அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்ற வதிவிட ஒருங்கிணைப்பாளர் Marc-André Franche , தொழில் சட்டதிருத்தம் குறித்து சர்வதேச தொழில் அமைப்பின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளிலும் கூடுதலான கவனம் செலுத்தினார்.

சர்வதேச தொழில் அமைப்பின் அங்கீகாரத்துடனான “ கரு சரு“ வேலைத்திட்டம் நவம்பர் மாதம் 1ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளதை அமைச்சர் குறிப்பிட்ட போது அதற்கு ஒருங்கிணைப்பாளர் பாராட்டு தெரிவித்தார்.

# நௌஷாத் காலமானார்

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலின் போது போலிக் குற்றச்சாட்டுகள் சுமத்தி கைதுசெய்யப்பட்டு பின்பு நீதிமன்றத்தினால் நிரபராதி என விடுவிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் சிரேஷ்ட குறியீட்டு உத்தியோத்தராகப் பணிபுரிந்த எம்.ஜே.எம். நௌசாத் (44) வியாழக்கிழமை காலமானார்.

கெக்கிராவையைப் பிறப்பிடமாகக் கொண்ட அக்குறணை மாவத்தபொலயில் வசித்த நௌசாத், மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

தாக்குதலை அடுத்து சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஒருவரின் கைத் தொலைபேசியில் நௌஸாதின் தொலைபேசி இலக்கம் இருந்தாகக் கூறி இவர் கைது செய்யப்பட்டு, பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அப்போதைய பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக திஸ ாநாயக்கவினால் அனுமதியுடன் கைது செய்யப்பட்ட நௌஸாத், பாராளுமன்றத்துக்கு படைகள் சகிதம் அழைத்து வரப்பட்டு, பெரும் காட்சியாகக் காண்பிக்கப்பட்டது. அவரால் பயன்படுத்தப்பட்ட ஹார்ட் டிஸ்க் உட்பட சகல உபகரணங்களும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் எடுத்துச் செல்லப்பட்டது. தொடரான தொந்தரவு காரணமாக இவர் கடுமையான மானசீக பாதிப்புக்குள்ளாகி இருந்தார். சில மாதங்களுக்கு முன் எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றி நிரபராதியாக இவர் விடுவிக்கப்பட்டார். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர் இவருக்காக இலவசமாக ஆஜரானார்.

முற்றும் நிரபராதி யாக விடுவிக்கப்பட்ட இவர், சில வாரங்களிலே மரணமடைந்தார். வியாழக்கிழமை இவரது ஜனாஸா அக்குறணை 9ஆம் கட்டைப் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பாராளுமன்ற ஊழியர்கள் உட்பட பெரும் திரளானோர் ஜனாஸாவில் கலந்து கொண்டனர்.

# அடுத்த தேர்தல் வெற்றியாளர் மொட்டுத்தரப்பு அச்சம்

(எம்.ஏ.எம்.நிலாம்)

**அரசு ஊழியர் சம்பள அதிகரிப்பு**

ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

அரசு ஊழியர்கள் 20,000 ரூபா சம்பள அதிகரிப்புக் கோரியுள்ள நிலையில், எதிர்வரும் பட்ஜெட்டில் ஊழியர் ஊதிய உயர்வு வழங்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். ஆனால், எவ்வளவு அதிகரிக்கப்படும் என்பதனை அவர் உறுதியாகத் தெரிவிக்கவில்லை. அதே சமயம், அரசு ஊழியர் சம்பள அதிகரிப்புக்கு ஏற்ற விதத்தில் தனியார் துறையினரும் ஊழியர் களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார்.

திங்கட்கிழமை அரசு ஊழியர் வேதன உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்த நிலையில், அதற்கு முன்னரே அமைச்சரவை சம்பள அதிகரிப்புத் தீர்மானத்தை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அடுத்த தேர்தல் வெற்றியாளர் மொட்டுத்தரப்பு அச்சம்**

2024 பொதுத்தேர்தலில் தாமே வெற்றியீட்டுவோம் என சவால் விட்டு வரும் மொட்டுத்தரப்பில் அந்தச் சுருதி குறையத் தொடங்கியுள்ளது. தம்மால் வெற்றி பெற முடியாது போனால் பலம்பொருந்திய எதிர்க்கட்சியாக இருப்போமென மொட்டுத்தரப்பு எம்.பி. ரோஹித அபேகுணவர்த்தன கூறத் தொடங்கிவிட்டார். மொட்டுத்தரப்புக்குள் பாரிய விரிசல் ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

மொட்டுக் கூண்டிலிருந்து பலர் ரணில் பக்கம் சாயத் தயாராகி வருவதால் என்ன செய்வது எனத் தெரியாமல் அங்கு தடுமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. பட்ஜெட் வெளிவந்த கையோடு மொட்டுக்கூண்டின் பூட்டை உடைத்துக் கொண்டு பலர் ரணில் பக்கம் சாயவுள்ளனர். லின்ஸா, அநுர யாப்பா கைகள் அங்கு ஓங்கி வருவது மொட்டுத்தரப்புக்கு தலையிடி ஏற்பட்டுள்ளது.

சிகிரிய மசாஜ் நிலையத்தில் கொக்கெயின் வியாபாரம்

சிகிரிய சுற்றுலா பிரதேசம் மட்டுமல்ல, ஒரு புனித பிரதேசமும் கூட. அந்தப் புனிதம் கெட்டுப்போகும் அவலம் தலைதூக்கியுள்ளது. அங்குள்ள மசாஜ் நிலையத்தில் கொக்கெயின் போதைப் பொருளுடன் ஒருவர் பிடிபட்டுள்ளார். தம்புள்ளை விசேட அதிரடி முகாம் அதிகாரிகளின் சுற்றிவளைப்பிலேயே நபர் மாட்டியுள்ளார்.

சிகிரியவில் சுற்றுலா விடுதிகளும் மசாஜ் நிலையங்களும் அதிகமாக இருப்பதால் போதைப்பொருள் பாவனையும் அதிகரித்து வருவதாக அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

**நெதன்யாஹூ உலகின் பெரிய கொலைக் குற்றவாளி**

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உலகப்போராக வெடிக்கும் அபாய எச்சரிக்கை காணப்படுகின்றது. இஸ்ரேலின் வெறியாட்டமே இதற்குப் பிரதான காரணமாகும்.

யூதர்களுக்கு வாழ்வுரிமை வழங்கி, வாழ்வதற்கு இடமளித்த பலஸ்தீனர்களை துவம்சம் செய்யும் பெரும் குற்றவாளியாக பெஞ்சமின் நெதன்யா/ஹ காணப்படுகின்றான். அன்று ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் சொன்ன வார்த்தைகள் மெய்யாகியுள்ளன. யூதர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள். அதையே நான் செய்தேன். என்றாலும் சிலரை விட்டுச் செல்கிறேன். என்றாவது நான் செய்தது சரியா பிழையா என்பதையிட்டு பாடம் படிப்பீர்கள் என்ற வார்த்தை உண்மை என்பதை இன்று புரிந்து கொள்ள முடிகின்றது.

உண்மையிலேயே நெதன்யாஹூ உலகின் மிகப்பெரிய கொலைக் குற்றவாளியாவான். ஹிட்லரை விட மோசமான கொலைஞன்தான் நெதன்யாஹூ.

**தப்பி பிழைத்தார் டயானா கமகே**

பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர்கள் இன்று மூக்குடைக்கப்பட்டுப் போயுள்ளனர். இரண்டு நீதிபதிகளைக் கொண்ட மேல்நீதிமன்றம் அவருக்கு எதிரான வழக்கை நிராகரித்துத் தீர்ப்பளித்துள்ளனர். ஒருவர் அவர் தொடர்பாக எதிராகத் தீர்ப்பளித்துள்ளார்.

டயானா கமகேயின் அடுத்த கட்டப் பயணம் எவ்வாறு அமையப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அவளைத் தொடுவான் ஏன்?, கவலைப்படுவான் ஏன்? என்ற நிலையில் தான் ஐக்கிய மக்கள் சக்தியினர் காணப்படுகின்றனர்.

# வை.எம்.எம்.ஏ. யின் 175 ஆவது கிளை ராகமையில் அங்குரார்ப்பணம்




(ஐ.ஏ. காதிர் கான்)

ராகமை பிரதேசத்தில் சிங்கள மொழி பேசும் 368 மலாயர் முஸ்லிம் குடும்பங்களை இலக்காகக் கொண்டு, தெமட்டகொடை - அகில இலங்கை வை.எம். எம். ஏ. பேரவையின் 175 ஆவது கிளை, பேரவையின் கொழும்பு - கம்பஹா மாவட்ட பணிப்பாளர் நஸாரி காமில் தலைமையில், ராகமை - சனிரோ வரவேற்பு மண்டபத்தில், (22) ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

”ராகமை பிரதேசத்தில் வசிக்கும் பௌத்த கிறிஸ்தவ முஸ்லிம் தமிழ் மக்களுக்கு இடையில் பரஸ்பர நல்லெண்ணத்தை மென்மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே இக்கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இன மத மொழி பேதங்களுக்கு அப்பால் நின்று சகல சமய மக்களுக்கும் சேவையாற்ற முடியும். எமது அனைத்து கிளைகளும், முழுக்க முழுக்க மிகச்சிறந்த சேவைகளையே மக்களுக்கு வழங்கி வருகின்றது.

ஆண்கள் பெண்களுக்குத் தேவையான கைத்தொழில் வசதிகள் மற்றும் அதற்குத் தேவையான தளபாடங்களுடன் பயிற்சி நெறிகள், வறிய நிலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் அவர்களுக்குத் தரம் வாய்ந்த வழி காட்டல்களுடன் பயனளிக்கும் வகையிலான கருத்தரங்குகள் என, பல்வேறு செயற் திட்டங்களை எமது அனைத்து கிளைகளின் ஊடாகவும் முன்னெடுத்து வருகின்றோம்.

கடந்த கொவிட் - 92 காலத்தில் கூட, அநாதரவான மக்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் வாழ்வாதார உதவிகளை, சமூக நோக்காக மாத்திரம் கருத்திற் கொண்டு மேற்கொண்டிருக்கிறோம். அத்துடன், ஒவ்வொரு ஆண்டும் ரமழான் காலங்களிலும் இதுபோன்ற உதவிகளைப் புரிந்து வருகின்றோம்.

எமது பேரவை உள்ளிட்ட அனைத்து கிளை உறுப்பினர்களது அயராத உழைப்பும் பங்களிப்புக்களுமே இதற்கு பிரதான காரணமாகும். அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும் நிதானமாகவும் பணியாற்றுவது, எனக்கு மன மகிழ்வைத் தருகின்றது. எமது ராகமை கிளையும், மக்களுக்குத் தேவையான அதன் சேவைகளை, இன்று முதல் நேர்த்தியாக வழங்கும் என்பதையும் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்”.

இவ்வாறு, இங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இக்கிளையைத் திறந்து வைத்து உரையாற்றும்போது, வை.எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ. ஹமீத் குறிப்பிட்டார்.

இவரது வழிகாட்டலின் கீழ் திறந்து வைக்கப்பட்ட இச்சிறப்பு நிகழ்வில், முன்னாள் தேசியத் தலைவர் சஹீத் எம். றிஸ்மி, அகில இலங்கை வை.எம்.பீ.ஏ. (பௌத்த பேரவை) தேசியத் தலைவர் மஹேந்திர ஜயசேகர ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

ராகமை பிரதேசத்தில் தமிழ் மொழி பேசும் மக்கள் இல்லாத நிலை குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது டன், முஸ்லிம்களுக்கென ஒரு பள்ளிவாசல் இல்லாதது தொடர்பிலும் விசேடமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், பேரவையின் தலைமையக மற்றும் மத்திய கொழும்பு கிளை உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

## கிழக்கில் முதலாவதான கணினி குறியீட்டு முறை கற்கை நெறிக்கான புலமைப்பரிசில்




(யூ.எல்.எம். றியாஸ்)

கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக கணினி குறியீட்டு முறை கற்கை நெறிக்கான புலமைப்பரிசில் திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை, டி.பி. கல்வி நிறுவகத்துடன் இணைந்து இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தவிசாளரும் விசேட வைத்திய நிபுணருமான டாக்டர் றிஸான் ஜெமீலின் முயற்சியின் பயனாக முதல் தடவையாக இத் திட்டம் கல்முனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முன்னோடியும் இலங்கையின் முதல் தர தொழில் அதிபரும் பிரபல சமூக சேவையாளருமான தம்மிக்க பெரேராவிடம் டாக்டர் றிசான் ஜெமீல் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இப் பிராந்தியத்தில் இவ்வேலை திட்டத்தின் மூலம் இப் பிராந்தியத்திலுள்ள பாடசாலை மாணவர்கள். பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் நன்மையடையவுள்ளனர்.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாப கார்த்த வைத்தியசாலை, கல்முனைஅல் ஹாமியா அரபுக்கல்லூரியுடன் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இத் திட்டம் தொடர்பாக ஊடகவியலாளர்கள், கல்வியலாளர்கல், அதிபர்கள் ஆகியோருக்கு விளக்கமளிக்கும் நிகழ்வும், பத்திரிகையாளர்கள் சந்திப்பும் டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை சாய்ந்தமருது கிளையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

## டைஸ்டார் நிறுவனத்தினால் வாழைத்தோட்டம் பள்ளிவாயலுக்கு சூரிய மின்சாரம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தற்போதைய நிலையில் மின்சாரத்திற்கான மின் கட்டணம் அதிகரித்துள்ள நிலையில் அதனை ஈடு செய்யும் வகையில் சூரிய மின் சக்தி மூலம் மின்சாரத்தை பெறும் திடத்தின் கீழ் ஐந்து மாடிகளைக் கொண்ட கொழும்பு 12 வாழைத் தோட்டம் அல் மஸ்ஜிதுன் நஜ்மி ஜீம்ஆப் பள்ளிவாசலுக்கு டைஸ்டார் நிறுவனத்தின் தலைவர் எச். எம்.ஹனிபா நஜீமினால் சுமார் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியில் தனது சொந்தச் செலவில் இலவசமாக இதனைப் பொருத்திக் கொடுத்துள்ளார்.

சுமார் மூவாயிரம் அலகுகள் மின்சாரத்தைப் பெறும் இந்த சூரிய மின் சக்தி கட்டமைப்பு மூலம் பள்ளிவாசலுக்கு மாதாந்தம் சுமார் 1100 அலகுகளே தேவைப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் மாதாந்தம் சுமார் என்பதாயிரம் ரூபா மின்சாரச் செலவு குறைவடைவதுடன் ஏனைய அலகுகளை இலங்கை மின்சார சபைக்கு வழங்கி அதன் மூலம் மாதாந்தம் சுமார் நாற்பதாயிரம் ரூபா வருமாணமும் கிடைக்கும் வகையில் இத்திட்டத்தை ஹனிபா நஜீம் ஹாஜியார் செய்து தந்துள்ளதாகவும் பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் முஹம்மது நிஸ்வான் தெரிவித்தார்.

இந்த உதவியை வழங்கிய ஹனிபா நஜீம் ஹாஜியார் மூலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜீம்ஆத் தொழுகையைத் தொடர்ந்து சூரிய மின் சக்தி கட்டமைப்பு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் பள்ளிவாசலுக்கும் மக்களுக்கும் செய்த இந்த சேவையைப் பாராட்டி அவருக்கு பள்ளிவாசல் நிருவாகத்தினராலும் ஜமாத்தினராலும் நினைவுச் சின்னம் வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார். இதன்போது உதவித் தலைவர் அல்ஹாஜ் அம்ஜதீன், பொருளாலர் யு.எல்.எம்.அஸ்லம் உட்பட நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களும் ஜமமாத்தினரும் கலந்து கொண்டிருந்தனர்.

பள்ளிவாசலின் பொருளாலர் அஸ்லம் இத்திடத்திற்கு முன்நின்று அயராது முயற்சி செய்து இந்த மின் கட்டமைப்பை பொருத்துவதற்கு உதவியமை குறிப்பிடத்தக்கது.





மருதமுனை தாருள் ஹுதா பெண்கள் அரபுக் கல்லூரியின் 2வது பட்டமளிப்பு கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு உலமாக்கள், புத்திஜீவிகள் அதிதிகளாக அழைக்கப்பட்டதுடன், பட்டமளிப்பு பெறும் மாணவிகளின் பெற்றோர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் – எம்.எம். ஜெஸ்மின்)

# கற்பிட்டி ஜன்னத்துல் அஸாபீர் பாலர் பாடசாலையின் வருடாந்த கண்காட்சி -2023





(கற்பிட்டி – எம்.எச்.எம். சியாஜ்)

கற்பிட்டி ஜன்னத்துல் அஸாபீர் பாலர் பாடசாலையின் வருடாந்த கண்காட்சி பத்தாவது முறையாகவும் கடந்த ஒக்டோபர் 30ம்,31ம் திகதிகள் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் ஜன்னத்துல் அஸாபீர் பாலர் பாடசாலையின் அதிபர் ஜே.என் பாஹீமா தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இக்கண்காட்சியிற்கு அதிதிகளாக கற்பிட்டி பிரதேச நிருவாக கிராம உத்தியோகத்தர் பி.எம்.எம் பைனஸ் , சமூக சேவையாளரும் அரசியல்வாதியுமான ஏ.ஆர்.எம் முஸம்மில் கிராம உத்தியோகத்தர் ஏ.ஆர்.எம் முஸாதிக் மற்றும் மஸ்ஜிதுல் புர்கான் பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷேஹ் எஸ். மிக்த்தாத் ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

இக்கண்காட்சியில் மக்களின் சிந்தனைக்கு விருந்தான பல ஆக்கபூர்வமான விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதனை பார்வையிடுவதற்காக இரண்டு நாட்களும் பெற்றோர்களும் பொது மக்களும் மற்றும் பாடசாலை மாணவர்களும் சமூகமளித்ததனையும் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் இக்கண்காட்சியில் பங்கு பற்றிய அணைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் இரண்டாம் நாள் நிறைவின் போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இக்கண்காட்சியினை ஜன்னத்துல் அஸாபீர் பாலர் பாடசாலையின் அதிபர் ஜே.என் பாஹீமா ஆசிரியர்களான ஏ.சி. யசினத் பானு, ஐ. அகீலா பானு எம்.எம். இமாரா மற்றும் தொண்டர் ஆசிரியர்களான ஏ.எப் ஹனா, எப். றபா ஆகியோருடன் பெற்றோர்களும் இணைந்து சிறப்பாக ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்ததனையும் காணக்கூடியதாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



ஏ.எச்.ஏ. ஹுஸைன்



# மேய்ச்சல் தரைக்கும் ஆப்பு வைக்க

## பேரினவாதம் கக்கும் பிக்கு

இன வாதம் மத வாதம் என்பன இயற்கையின் செயல்பாட்டையும் விட்டு வைக்கப்போவதில்லை என்பதற்கு கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் நீறு புத்த நெருப்பாக இருக்கும் மேய்ச்சல் தரைப் பிரச்சினை ஒரு சிறந்த உதாரணமாகும்.

கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக உள்ள மயிலத்தமடு, மாதவனை ஆகிய நீண்ட நெடும் பிரதேசங்கள் இப்பொழுது சிறுபான்மைச் சமூகங்களுக்கு பேரினவாதம் வைத்துள்ள பொறியாக மாறியுள்ளது.

அங்கு தலைமுறை தலைமுறையாக கால்நடைகள் மேய்ந்து வந்த மேய்ச்சல் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதனை மீட்டெடுக்க கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக போராட்டங்கள் நடந்து வருகின்றன.

கடைசியாக கிழக்கு மாகாண ஆளுநரிடம் இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டபொழுது இந்தக் காணி மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது எனவும், எனவே இது தொடர்பில் மகாவலி அதிகார சபையே தீர்மானிக்க வேண்டும் எனவும் தன்னால் இதற்குத் தீர்வு காண முடியாதெனவும் தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் கைவிரித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 120 கிலோ மீற்றர் தூரம் பொலொன்னறுவை, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் எல்லையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள்ளே அமைந்துள்ள இந்த மேய்ச்சல் தரை காணிகள் உள்ள பிரதேசம் இப்பொழுது இனவாத போராட்டத்தைத் தூண்டிவிடும் இடமாகப் பாவிக்கப்படுகிறது.

வெளி மாவட்டங்களிலிருந்து, இந்த மேய்ச்சல் தரை காணி அமைந்துள்ள பிரதேசத்தில் சோளச் செய்கையாளர்கள் என்ற போர்வையில் மறைமுக பேரினவாத குடியேற்றமாக மாற்றப்பட்டுள்ள இந்தப் பிரச்சினையால் பூர்வீகமாக அங்கு தமது கால்நடைகளை மேய்த்து வந்த சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த சுமார் 3000 பண்ணையாளர்களும் அவர்களது 3 இலட்சத்திற்கு மேற்பட்ட கால்நடைகளும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

கிட்டத்தட்ட 3150 ஹெக்ரேயர் பரப்பளவுள்ள இந்தப் பிரதேசம் இப்பொழுது பேரினவாத வன்முறையின் மையப்புள்ளியாக மாற்றப்பட்டுள்ளது.

எதிரும் புதிருமாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. காவி உடை தரித்தோர் மிக மூர்க்கத்தனமான கோஷங்களுடன் இந்த விடயத்தில் மூக்கை நுழைத்துள்ளனர். இதனால் உண்மையான பிரச்சினை வேறு வடிவம் எடுத்துள்ளது.

கடந்த 22.08.2023 அன்று மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள கால்நடை பண்ணையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்காகச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தைச் சேர்ந்த இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய தலைவர்களையும் அவர்களுடன் சென்ற ஊடகவியலாளர்களையும் அந்த பகுதியில் செயற்படும் பௌத்த பிக்கு தலைமையிலான சட்டவிரோத காணி அபகரிப்பாளர்கள் தடுத்து வைத்து அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.



பாதுகாப்பு தரப்பினருக்கும் நீதிமன்ற சட்டங்களுக்கும் சவால் விடும் நிலையில் பௌத்த பிக்கு ஒருவர் செயற்படும்போது காவல் துறையினர் கைகட்டி நின்று அந்தப் பிக்குவை சிரம் தாழ்த்தி வணங்குகின்றனர். பிடித்து வைக்கப்பட்டவர்களை மீட்டெடுக்க வந்த காவல்துறையினர், உயர் அதிகாரிகள் ஆகியோர் பிக்குவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்ற விதம் இந்த நாட்டில் பௌத்த மதத்தவரைத் தவிர வேறு எந்த மதத்தவருக்கும் பாதுகாப்போ நீதியோ கிடைக்காது என்பதையே மிக ஆழமாக பதிவு செய்துள்ளது.

இந்த சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்காலம் குறித்து மாத்திரம் அல்லாமல் மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிக்கும் 95 சதவீத தமிழ் பேசும் சமூகங்களின் எதிர்காலம் குறித்தும் அவர்களது வாழ்வுரிமைக்கான சுதந்திரம் குறித்தும் பல கேள்விகளை எழுப்பியுள்ளன.

இதற்கெல்லாம் ஒரேயொரு காரணம்தான் உண்டு. அதை அந்த சண்டித்தன பிக்குவே உரத்துக் கூறுகிறார். அதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஓர் நாடாளுமன்ற உறுப்பினரைத் தேர்வு செய்யவேண்டுமாக இருந்தால் அங்கு அதிகளவு சிங்கள மக்களைக் குடியமர்த்த வேண்டும் என்ற மறைமுக திட்டத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தை சூழ்ந்துள்ள காடுகளை அழித்துவிட்டு பெரும்பான்மை இனத்தை அப்பகுதியில் குடியமர்த்தும் திட்டம் அமைந்துள்ளதாக நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏறாவூர் புன்னைக்குடா கடலோரப் பகுதியிலும் இராணுவ முகாம்களின் துணையோடு பொலொன்னறுவை திம்புலாகலைப் பகுதியைச் சேர்ந்த சிங்கள சமூகத்தினர் சுமார் 45 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டப் பண்ணையாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட மேய்ச்சற் தரைகளின்றி பல்வேறு இடர்களை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் செய்கை ஆரம்பமானவுடன், மாவட்டத்தின் அனைத்து இடங்களிலிருந்தும் அரசாங்க அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட மேய்ச்சல் தரைப்பிரதேசத்திற்கு அதிகமான கால்நடைகள் கொண்டுவரப்படுகின்றன.

அவ்வாறான இடங்களே, மாதவனை மயிலத்தமடு என்று கூறப்படுகின்ற மேய்ச்சல் தரைப் பிரதேசங்களாகும். அங்கு மேய்ச்சலுக்காகக் கொண்டுவரப்படும் கால்நடைகள் குடியேற்றப்பட்டுள்ள வெளி மாவட்ட பெரும்பான்மை சமூகத்தினரால் களவாடப்படுவதும், பிடிக்கப்படுவதும், இறைச்சிக்காக கொல்லப்படுவதும் தற்போது வழமையாக இடம்பெறும் சம்பவங்களாகி விட்டன என்கின்றனர் பாதிக்கப்பட்ட சிறுபான்மைச் சமூகப் பண்ணையாளர்கள்.

அதன்படி சுமார் 2000 கால் நடைகள் அத்துமீறிய பேரினவாத குடியேற்றக் காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் இதனை விட சுமார் 1250 கால்நடைகள் வேறு மறைமுக காரணங்களால் கொல்லப்பட்டுள்ளதாகவும் சிறுபான்மையின பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### வழக்கு தாக்கல்

மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில், கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் 2021ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை 2021 பெப்ரவரி 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்றைய தினம் பெப்ரவரி 28க்கு முன்னர் வெளியேறிவிடுவார்கள் என மகாவலி அதிகார சபையினால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

பின்னர் ஜூன் 21ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ அங்கிருந்து சேனைப் பயிர்ச்செய்கையாளர்கள் விலகிச் செல்ல வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும் அது முழுமையாக நடைபெறவில்லை.



முடிவின்றித் தொடரும் இந்தப் பிரச்சினையை பேரினவாதிகள் தமக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொண்டு தமது இலக்கை அடைந்து கொள்வர் என்பதே கடந்த கால அனுபவங்களாக நமக்கு உணர்த்தி நிற்கின்றன என்கின்றனர் மட்டக்களப்பில் பாதிக்ப்பட்டுள்ள சிறுபான்மைச் சமூக மக்கள்.

மட்டக்களப்பு மங்களராம விஹாராதிபதி அம்பிட்டிய சுமணரட்ன தேரருக்கு எதிராக தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு கடந்த 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த நீதிவான், ஊடகங்களுக்கு தேரர் வழங்கிய செவ்வியை இறுவட்டில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் வழக்கை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மட்டக்களப்பு ஜெயந்திபுர விகாரைக்கு அருகில் உள்ள வீதியை கடந்த 25ம் திகதி தடை செய்து, தெற்கிலுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரினதும் தலைலைய வெட்டி அனுப்பப்போவதாக அச்சுறுத்தல் விடுத்து சிறுபான்மை மக்களை அவமதித்து தூஷித்து சத்தமிட்டிருந்தார்.

சிறுபான்மை மக்களிடையே பாரிய இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் முகமாக கருத்துக்களை தெரிவித்துள்ளமை ஊடகங்கள் ஊடாக வெளிவந்துள்ளது.

இன முரண்பாட்டை தோற்றுவிக்க தேரர் முயற்சித்ததுடன் தமிழ் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இனங்களுக்கிடையே இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த இந்த தேரரின் செயற்பாட்டை கண்டித்து அவருக்கு எதிராக தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் க. மோகன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த 27ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து இது தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவிடம் இந்த விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மேற்கொண்ட தொடர் விசாரணையின் பின்னர் முறைப்பாட்டின் பிரதிவாதியாக மோகனை குறிப்பிட்டு தேரருக்கு எதிராக கடந்த 31ஆம் திகதி மனுத் தாக்கல் செய்தனர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதவான் பீற்றர் போல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது, ஊடகங்களுக்கு தேரர் வழங்கிய செவ்வியை இறுவட்டுக்களில் பதிவு செய்து 20 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.





# குடிசை குடியிருப்புக்களில் வாழும்

# பொருளாதார முதுகெலும்புகள்!



சுஜப்,எம்,காசிம்

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் கோப்பி பயிர்ச்செய்கைக்காக 1823இல் இந்தியாவின் மலைப்பாங்கான பிரதேசங்களிலிருந்து நம் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டவர்கள் மலையகத்தவர்கள். அந்நியச்செலாவணி உழைப்புக்காக அழைத்துவரப்பட்ட இவர்களை வந்தேறுகுடிகளென வர்ணிக்க முடியாது.

கோப்பிச் செய்கை கைகொடுக்காததால் 1864இல் தேயிலைச் செய்கைக்காக இம்மக்கள் பயன்படலாயினர். தேயிலையின் அடியில் தங்கம் இருப்பதாகவும் அந்நியச்செலாவணியில் அரைப்பங்கைத் தருவதாகவும் ஆசை காட்டித்தான் இம்மக்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர்.

ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழிருந்த இந்தியா, மலேசியா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளிலிருந்து இவர்கள் கொண்டுவரப்பட்டதாக வரலாறு விரிகிறது. இந்நாடுகளின், நிர்வாகங்களை கண்காணிக்கத்தானே கிழக்கிந்திய கம்பனியே நிறுவப்பட்டது. சொந்த தேசத்திலிருந்து இன்னுமொரு நாட்டுக்கு உழைப்புக்காக கொண்டுவரப்பட்ட இம்மக்கள், இந்த இருநூறு வருடங்களில் எதிர்கொண்டவைகளே தனியொரு தேசத்தினராக இவர்களை அடையாளப்படுத்தியுள்ளது.

இலங்கை - இந்தியா காங்கிரஸ் சார்பாக 1948இல் போட்டியிட்டு, எட்டு பிரதிநிதிகளை வெல்லுமளவுக்கு இம்மக்களிடம் அரசியல் விழிப்பிருந்தது. இதன் விபரீதங்களில் விழித்தெழுந்த அன்றைய ஆட்சியாளர்கள் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையைப் பறித்தனர். அன்று நாடற்றவர்களாகியதிலிருந்து தொடங்கிய சவால்கள் இருநூறு வருடங்களாகியும் நிலைக்கின்றன.

இச்சவால்களை வெல்லும் நோக்கம் தனித்துவ அரசியலுக்கான தேவையை உணர்த்தியதாலேயே, 1977 தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிட்டது. ஒற்றுமையிருந்திருந்தால் உருப்பட்டிருக்கலாம். மூன்றுக்கும் அதிகமாக அரசியல் கட்சிகள் முளைத்ததால், திண்டாடுகிறது மலையகம். இங்கு மட்டுமல்ல எல்லா சமூகங்களிலும் இதுதான் நிலைமை. கட்சிகள் அதிகரிப்பதால் ஒன்றுபடல்கள் சிதைவடைவதை தடுக்கவே முடியாதுள்ளது.

சொத்து தேடுவதற்கு வருவதாக நினைத்த இவர்கள், செத்துப் பிழைக்கும் நிலைமைக்கு மலையக நிலை செல்லக் காரணம் என்ன? நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த வந்த முதுகெலும்புகள், இன்று குனிந்து நிமிர முடியாத குடிசைகளுக்குள் வாழ நேரிட்டுள்ளது. இதை நினைத்து இருநூறு வருடங்கள் அழுதாலும் தீராது இந்தத் துயரம். கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்புக்கள் மற்றும் வாழிடங்களுக்காக வாழ்நாள் முழுவதும் அழவேண்டிய சமூகத்தவராக ஆக்கப்பட்டுள்ளனர் இம்மக்கள். அலைக்கழிதல்கள், ஏமாற்றங்கள் என இவர்கள் எதிர்கொள்பவை அனைத்தும் சவால்களே

முதலாளித்துவத்தின் பிடியிலிருந்து ஒரு அடியேனும் நகர முடியாதளவுக்கு முடக்கப்பட்ட சமூகம் இது. தோட்டக் கம்பனிகள், கங்காணிமார்கள், துரைமார்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் என சகல அதிகாரங்களும் இவர்களின் உழைப்பை உறிஞ்சி எஞ்சியதே ஊதியமாகக் கிடைக்கிறது.

மனிதக் காலடிகளே படாத மலையின் உச்சியில் சென்று உழைப்பவர்கள் இந்தத் தொழிலாளர்கள். காடுகள், புதர்களுக்குள் பதுங்கியுள்ள கரடிகள், சிறுத்தைகள் இன்னும் கொடூர விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்குள்ளும் கடமையில் கடினம் எதிர்பார்க்கப்படுகிறது. வெயில், பனி, குளிர், மழை போன்ற இயற்கை சீதோஷ்ணங்களுக்கு மரத்துப்போன மானிடப்பிறவிகள் மலையகத்தவர்கள்.

இங்கு வந்து வருடங்கள் கடந்துள்ள இவர்களுக்கு இப்போது புது நம்பிக்கையூட்டப்படுகிறது. பத்தாயிரம் வீட்டுத்திட்டம், மலையகப் பல்கலைக்கழகம், தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் நேரடித் தலையீடுகள் இல்லாவிடினும் உணர்வுகள் இணைந்திருப்பது அமைச்சர் சீதாராமனின் வருகையில் உணரப்படுகிறது. இதனால், இம்முறை வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என இம்மக்கள் நம்புகின்றனர்.

இன்னொரு வகையில், மலையகத்தவர் மீதான இந்தியாவின் அக்கறை எதிர்காலத்தில் அழுத்தங்களாக மாறாதிருப்பது அவசியம். இந்திய கடனுதவிகளும் மலையகம் மீதான பாரதத்தின் பார்வைகளும் இந்திய, இலங்கை இராஜதந்திர உறவுகளை எந்தளவு உயர்த்துமோ?



## சிலாபத்துறை இமுசலிமுஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பு!

### மு.கா.தலைவர் ஹக்கீமின் முயற்சியின் பலன்

மன்னார் பெருநிலப் பரப்பில் முசலி பிரதேசத்தில் இருந்து க.பொ.த.(உயர்தர)பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அங்கேயே பொருத்தமான நிலையத்தில் பிரஸ்தாப பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்இ பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் முயற்சியின் பயனாகக் கிட்டியுள்ளது.

முசலி பிரதேசத்தைச் சேர்ந்த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சை நிலையமாக வெகு தூரத்தில் அமைந்துள்ள மன்னார் பரிசாரிக்கண்டல் என்ற இடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு இது பற்றி கல்வி அமைச்சு அறிவித்தற்கமையஇஅவரால் மன்னார் வலய கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய இதுபற்றி நன்கு ஆராயப்பட்ட பின்னர்இ முசலிப் பிரதேச மாணவர்களுக்கு க.பொ.த.(உயர்தர) பரீட்சைக்கு சிலாபத்துறைஇமன்ஃமுசலி முஸ்லிம் மகா வித்தியாலத்தில் அமைக்கப்படவுள்ள நிலையத்தில் தோற்றுவதற்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் சார்பில் மேலதிக செயலாளர் எச்.நிலக் ஷி என்.குணசேகர கடிதம் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுக்கு 27.10.2023 ஆம் திகதி அறிவித்துள்ளார்.



சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத்அல்காந்தி அமைச்சர் நிதி ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிடியை சந்தித்து உரையாடிய போது எடுக்கப்பட்ட படம்

## மனநலமும் ஆலோசனையும் 04

# அவசர கோளாறின் விளைவுகள்

கடந்த வாரத்தில் அவசரக் கோளாறு பற்றி தெரிந்து கொண்டோம். இன்று அவசரக் கோளாறால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி தெரிந்து கொள்வோம்

அவசரக் கோளாறு என்பது விடயங்களில் தொடர்ச்சியான அவசரம், வேகத்தில் செயற்படுதல், மற்றும் கவலை அல்லது குழப்பத்தால் வகைப்படுத்தப்படும் நடத்தை முறை என்று பார்த்தோம்.

அவசர கோளாறு எங்கள் நல்வாழ்வை பல வழிகளில் பாதிக்கலாம், அவற்றுள் சிலவற்றை நாம் தெரிந்து கொள்வோம்

1. எரிச்சலை ஏற்படுத்தும் சாதிக்கப்

போராடுபவர்கள் அவசர கோளாறை அனுபவிக்கும் வாய்ப்புகள் அதிகம், ஏனெனில் அவர்களின் கவனம் எப்போதும் அதிகமாகச் சாதிப்பதில் அல்லது அதை அடைவதில் தான் அதிகமாகவே இருக்கும். அந்த நேரத்தில் உருவாகும் அவசர உணர்வு அடிக்கடி மன உளைச்சலுக்கு வழிவகுக்கும். இது ஒருவித எரிச்சலை தந்து கொண்டே இருக்கும். நிதானம், அமைதி போன்ற தன்மையுடன் செயற்படாத போது இந்த நிலை ஏற்படும்.

2. மன ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும்

நாள்பட்ட மன அழுத்தம் மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கி விடும். அடுத்த வேலையைப் பற்றி தொடர்ந்து சிந்திப்பதை நோக்காக கொண்டிருக்கும் தன்மை அதிகம் இருப்பதால் சில முக்கியமான செயல்பாடுகள் நழுவிச் செல்வதனால் தொடரான கவலை, குழப்பம் போன்ற ஆரோக்கியமற்ற நிலைகளை தந்துவிடும்

3. சோர்வை உணரவைக்கும்

தொடர்ந்து பணி, பணி என்று பணிக்கு தாவும் போது, நாள் முடிவதற்கு முன்பே ஒரு அசாதாரண சோர்வை அல்லது கலைப்பை உடலில் உருவாக்கி விடும். இது எதிர்பாராத உடல் உபாதைகளை இலகுவாக உருவாக்கி விடும்.

4. நேரத்தைச் சேமிப்பதில் நிர்ணயம்

அவசர நோயின் முக்கிய அம்சம், செய்ய வேண்டிய பட்டியலில் உள்ள பணிகளை முடிக்க போதுமான நேரம் இல்லை என்ற உணர்வை உருவாக்குவதாக இருக்கும். இந்த உணர்வு, முடிந்தவரை குறைந்த நேரத்தில் வியங்களைச் செய்து முடிப்பதில் உறுதியாக இருக்கக் வைத்து விடும், இது பல தவறுகளுக்கு வழிவகுக்கும்.

5. அதிக கவனமும் முன்னுரிமையும்

அவசர கோளாறு உற்பத்தித்திறனில் அதிக கவனம் செலுத்தத் தூண்டுவதுடன் வேறு எதிலும் கவனம் செலுத்த வைக்காமல் வைத்துவிடும். இதனால் எப்போதும் அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் நிலை நிறுத்திவிடும்

6. உறவில் இறுக்கம்

விடயங்களை விரைவாகச் செய்வதில் கவனம் செலுத்தும்போது, அன்புக்குரியவர்களான பெற்றார்கள், மனைவி, பிள்ளைகள் மற்றும் நெருக்கமான உறவுகளுடன் நேரம் செலவிடுதில் தாமதத்தை அல்லது அவர்களுடன் நீண்ட இடைவெளிகளை ஏற்படுத்தும்.

7. முக்கியமானவை நழுவிப் போகும்

அவசரக் கோளாறு முன்னெப்போதையும் விட மிகவும் பிஸி அல்லது ஓட்டமா இருக்கிறோம் எனும் உணர்வுக்குள் இழுத்துத் தள்ளி விடும்.

ஆனால் மிகவும் முக்கியமானவற்றைக் கூட செய்ய நேரம் இல்லை என்று சொல்ல வைத்துவிடும்

8. உடலை கவனிப்பதில் அக்கறை குறையும்

இரவில் எட்டு மணிநேர தூக்கம் கிடைக்காமை, தினசரி உடற்பயிற்சி செய்ய வாய்ப்பு இல்லாமை வீட்டில் சமைத்த ஆரோக்கியமான உணவு கிடைக்காமை

உடல் எடையை அதிகரித்தல்

வருடத்திற்கு பல முறை நோய்வாய்ப்படுதல்,

தொடர்ந்து சோர்வை அனுபவித்தல் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் போன்ற பல உடல்நல பிரச்சனைகளை உருவாக்கி விடும்.

9. ஆன்மீக ஒழுக்கங்கள் நழுவுதல்

அவசரக் கோளாறின் காரணமாக அதிக பிஸியாக இருக்கும்போது, ஆன்மாவுக்கு உயிர் கொடுக்கும் விடயங்கள் படிப்படியாக நழுவிச் செல்ல ஆரம்பிக்கும். வணக்க வழிபாடுகளில் ஈடுபாடுதல், பிரார்த்தனை செய்தல் போன்ற இறைவனுடனான தொடர்புகளில் கூட அவசரத்தை ஏற்படுத்தி விடுவதோடு அதற்கு ஒதுக்க வேண்டிய நேரத்தை கொடுக்காமல் வைத்துவிடும்.



10. முரண்பாடுகளை ஏற்படுத்தும்.

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களிலும் பலருடனான உறவுகளிலும் கசப்புணர்வுகளை, பிழையான புரிதல்களை ஏற்படுத்திவிடும்.

இப்படியான பல பாதிப்புகளை உருவாக்கும் கொடிய தன்மை பெற்ற விடயம் தான் அவசரக் கோளாறு என்பது.

எனவே அவசரம்.. அவசரம்... என்று அழைக்கிறவர்கள் எப்படி அதில் இருந்து மீண்டு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அமைப்பது பற்றி அடுத்த பதிவில் பார்ப்போம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# இரத்தினபுரி பஸார் பள்ளிவாசலில் 4 வருடங்களின் பின் மீண்டும் ஜும்ஆ



இரத்தினபுரி பஸார் ஜும்ஆப் பள்ளிவாசலில் நான்கு வருடங்களின் பின்னர் ஜும்ஆத் தொழுகை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து இப்பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகை நிறுத்தப்பட்டிருந்தது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினருமான சபீக் ரஜாப்தீன் வக்பு சபையுடன் நடாத்திய பேச்சுவார்த்தையையடுத்து கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து ஜும்ஆத் தொழுகை ஆரம்பிக்கபபட்டுள்ளது. முன்னாள் எம்.பி. சபீக் ரஜாப்தீன், புதிய நிர்வாக சபைத் தலைவர் எம்.ஏ.எச்.சூபி மற்றும் செயலாளர் ஆகியோருக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

முதலாம் நாள் சுமார் 400க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதாக பள்ளிவாசலின் செயலாளர் ஐ.என்.எம். நிஸாம் தெதரிவித்தார்.

# வடமாகாணத்திலிருந்த முஸ்லிம்கள் இனச்சுத்திகப்பு நினைவு தின நிகழ்வு!




(எம்.பஹ்த் ஜுனைட்)

1990 ஒக்டோபர் 29 இல் புலிகளால் வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்பு மேற்கொண்டு 33 வருட நினைவு தின நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (29) காத்தான்குடி அல் மனார் அறிவியல் கல்லூரி , அப்துல் ஜவாத் மண்டபத்தில் நடைபெற்றது .

எக்ஸத் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஜெ.எல்.எம்.ஷாஜஹான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகவும் வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்கள் அமைப்பின் செயலாளர் சட்டமானி பி.எம்.முஜீபுர்ரஹ்மான் முன்னாள் கிழக்குமாகாண சபை உறுப்பினர் யு.எல்.எம்.என்.முபீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டு வட மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கருத்துரைகள் வழங்கினார்கள்.

இந் நிகழ்வின் போது 1990 இல் வடமாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு அடிப்படை உதவிகள் வழங்கிய புத்தளம் மாவட்ட மக்களை கௌரவித்து புத்தள மாவட்ட மக்கள் சார்பில் மௌலவி எம்.பீ.எம். ஷிப்னாஸ் (மிஸ்பாஹி) அவர்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மஸ்ஜித் சம்மேளன ஏற்பாட்டில் பலஸ்தீன் சம்பந்தமான கருத்ததரங்கு

கொழும்பு மாவட்ட மஸ்ஜிதுகளின் சம்மேளனம் மாவட்டத்தின் பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்களுக்கு ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கொன்று எதிர்வரும் 12ஆம் திகதி விளையாட்டு அமைச்சு டங்கனள் லைப் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இக்கருத்ததரங்கில் 150 மஸ்ஜிதுகளின் சார்பில் 450 நம்பிக்கையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கின் ஓரங்கமாக பலஸ்தீனின் இன்றைய நிலை பற்றி ஆராயப்படும். இதில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், பலஸ்தீன தூதுவர் ஹம்தல்லாஸ் ஹைத், ஜாமியா நளீமியா பணிப்பாளர் அஷ்ஷேக் அகார் முஹம்மத், சன்டே டைம்ஸ் ஊடகவியலாளர் அமீன் இஸ்ஸதீன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் சம்மாந்துறை ஏ.ஆர்.எம். முர்ஷித் அண்மையில் பொறியியலாளராக நியமனம் பெற்றுள்ளதுடன், தனது நிரந்தர நியமனக் கடிதத்தை பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதனையும் படத்தில் காணலாம்.

# வைத்தியர் ஜலீலா முஸம்மிலின் "தூரிகை வரையும் மின்மினிகள்"

## ஹைக்கூ கவிதை நூல் வெளியிட்டு வைப்பு




(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

வைத்தியர் ஜலீலா முஸம்மில் எழுதிய "தூரிகை வரையும் மின்மினிகள்" ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு சனியன்று ஏறாவூர் வாவிக்கரையில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

ஏறாவூர் நகர பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். எம். மஹ்பூழ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ். எச். முஸம்மில், மட்டக்களப்பு அஞ்சற் பயிற்சிக் கல்லூரி போதனாசிரியர் கே. பாத்திமா ஹஸ்னா, மருதமுனை மல்ஹருல் ஷம்ஸ் மகாவித்தியாலய அதிபர் றிப்கா அன்சார் ஆகியோருட்பட இன்னும் பல அதிதிகளும் பிரமுகர்களும் இலக்கிய ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

மருத்துவத் துறையில் வைத்திய அத்தியட்சகராகப் பணிபுரியும் ஜலீலா, இலக்கியத் துறையிலும் கூடுதலான ஈடுபாட்டுடன் பயணித்து வருகிறார். சுமார் 40இற்கு மேற்பட்ட இவரது மருத்துவ, இலக்கிய ஆக்கங்கள் இலங்கை இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் வெளிவந்துள்ளன.

அதேவேளை இவர் தனது இலக்கிய மருத்துவ படைப்பாக்கங்களுக்காக பல்வேறுபட்ட விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

இவரது "சிறகு முளைத்த மீன்" எனும் முதற்கவிதை நூல் தமிழ்நாடு சென்னைப் புத்தகக் கண்காட்சியில் எழிலினிப் பதிப்பகத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# பிரச்சினைகளுக்கு தீர்வு தருமா?

## 2024 பட்ஜெட்

அரசாங்கத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் 2023 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி நிதி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடாகி இருக்கின்றது. 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட திடீர் அரசியல் மாற்றத்தின் பின்னர் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்ற ரணில் விக்கிரமசிங்காவால் சமர்ப்பிக்கப்படுகின்ற இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இதுவாகும். கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமையொன்றுக்கு முகம் கொடுத்த பின்னர் ஒருவாறு நாட்டை பொருளாதார அபிவிருத்தி என்ற இலக்கை நோக்கி கொண்டு செல்லும் நெருக்கடியான பயணத்தின் சோதனை மிக்க கட்டமாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைய இருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கம் காணப்பட்ட 300 கோடி ஐக்கிய அமெரிக்க டாலர் மதிப்புள்ள கடன் உதவி மற்றும் கடன் வழங்குவதற்காக நாணய நிதியம் விதித்துள்ள கடுமையான நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு மத்தியில் இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட இருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

சர்வதேச நாணய நியதியத்தின் அதிகாரிகள் 2023 செப்டம்பர் 14 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரையில் இலங்கைக்கு விஜயம் செய்து மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் ஏற்பட்ட திருப்தி நிலை மற்றும் நாணய நியதியத்தின் நிபந்தனைகளை அமுல்படுத்துவது உத்தரவிடப்பட்டுள்ள வரிக் கொள்கையை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள், அதிருப்திகளுக்கு மத்தியில் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்வைப்பு இடம்பெற இருக்கின்றது.

இலங்கை நாடு சுதந்திரம் அடைந்த 75 வருட கால வரலாற்றில் ஒருபோதும் சந்தித்திராத அளவிற்கு பொருளாதார நெருக்கடியொன்றை சந்திப்பதற்கான பிரதான காரணம் 2005 ஆம் ஆண்டின் பின்னர் இருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்ட ராஜபக்ஷ கால ஆட்சி நிர்வாகமும் 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நிலவிய முறைகேடான ஆட்சி நிர்வாகமும் முக்கிய காரணமாக பொருளாதார ஆய்வாளர்கள் அப்போது சுட்டிக்காட்டினர். அந்த காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட தூர நோக்கம் இல்லாத பொருளாதார திட்டமிடல்கள், அரச சொத்துக்களிலான சூறையாடல்கள், ஊழல்கள், மோசடிகள் என்பனவே இவ்வாறான ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணமாக சுட்டிக்காட்டப்பட்டன. அதன் உச்ச கட்டமாக அமைந்தது இலங்கை மத்திய வங்கியில் சிறப்பெடுப்பு ஒதுக்கு (எஸ்.டி.ஆர்) என்று இருக்க வேண்டிய அமெரிக்க டாலர் முற்றாக காலியாகும் வரையில் அப்போதைய பொருளாதார வல்லுனர்கள் கண்மூடித்தனமான ஆட்சியை முன்னெடுத்ததால் 2021 ஆம் ஆண்டு நாடு மிக மோசமான நிலையை சந்திக்க நேரிட்டது எனலாம். அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான அமெரிக்க டாலர் பற்றாக்குறை என்ற நிலைமையால் நாடு மிக மோசமான அனுபவத்தை கண்டதை மறக்க முடியாது.

2500 வருட கால நீண்ட வரலாற்றை கொண்ட தேசம் என்று பெருமையாக கூறிக்கொண்டாலும் இன்றைய நிலையில் சர்வதேச நாடுகளின் முன்னிலையில் முழங்காலில் மண்டியிட்டு வீழ்ந்து பில்லியன் கணக்கிலான கடனுக்காக கையேந்திக் கொண்டிருக்கின்ற ஒரு தேசமாக மாறி இருக்கின்றது. இவ்வாறா னதொரு நிலையில் இருந்து நாடு படிப்படியாக மீண்டு வருகின்ற கட்டத்தில் தான் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படுகின்றது. ஏற்கனவே இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற சில நாடுகள் கடன் மீளமைப்புக்கு இணங்கிய நிலையில் புதிய கடன் வாங்கும் படலம் ஆரம்பிக்கப்பட்ட புதிய நம்பிக்கையுடன் இந்த நிதியாண்டிற்கான உத்தேச முன்வைப்புக்கள் இடம்பெற இருக்கின்றது.

வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட இருப்பதோடு வரவு செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 2023 நவம்பர் 21 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறும். வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு டிசம்பர் 13 ஆம் திகதி வரை நடைபெறும் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 13 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறும். எவ்வாறாயினும் இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பாக பல்வேறு துறைகளையும் சேர்ந்த அரச ஊழியர்கள் கூடுதலான எதிர்பார்ப்பை கொண்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அதாவது 2016 ஆம் ஆண்டு அரச ஊழியர்களுக்கு ரூபா 10,000 சம்பள அதிகரிப்பொன்று வழங்கப்பட்ட பின்னர் கடந்த ஏழு வருடங்களாக எந்தவிதமான சம்பள அதிகரிப்பும் வழங்கப்படாத நிலையில் இம்முறை சம்பள அதிகரிப்பை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்ச்சியாக நாட்டில் பல்வேறு துறைகளையும் சேர்ந்த அரச ஊழியர்களால் அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவு உயர்வை சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் 20,000 ரூபா சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்று வழங்கப்பட வேண்டும் என்ற போராட்டத்தை தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வருகின்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், புகையிரத ஊழியர்கள், மருத்துவ சுகாதாரத்துறை ஊழியர்கள், ஆசிரியர்கள், இலங்கை மின்சார சபை ஊழியர்கள் என்று வேறுபாடின்றி இந்த 20 ஆயிரம் ரூபாவை கோரும் போராட்டம் தொடர்கின்றன.

வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட இருப்பது தொடர்பாக அண்மையில் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு போதுமான சம்பள உயர்வு பொதி காத்திருக்கின்றது. அதனால் தனியார் துறையினரும் அதன் ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்துள்ளார். எவ்வாறாயினும் கடந்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் இலங்கையில் இருந்து பலதரப்பட்ட தகைமைகளையும் கொண்ட சுமார் 300,000 தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் குறிப்பாக வைத்தியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பொறியியலாளர்கள், பல்வேறு துறைசார் தொழில் வல்லுனர்கள் என்று நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய வேண்டிய திறமையான ஊழியர் படை உள்ளடங்குவதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

நாட்டின் கடந்த கால பொருளாதார நிலைமை காரணமாக இந்நாட்டின் முதுகெலுப்பாக கருதப்பட வேண்டிய இளைஞர் படை நம்பிக்கை இழந்துள்ள நிலையில் தொழிலாளர் படையும் விரக்தி நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அரசாங்கம் அறிமுகம் செய்துள்ள புதிய வரிக் கொள்கை காரணமாகவும் இந்த பாதிப்பு இருந்து வருகின்றது. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு நான்கு மடங்காக உயர்வடைந்துள்ள நிலையில் வருமான மட்டம் மிகவும் தாழ்வாக இருப்பதும் சாதாரணமாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கடைபிடிக்கப்படுவது போன்ற உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரி அமைந்திருக்கின்றமையும் நாடு குறித்து ஊழியர் படையின் அதிருப்திக்கு காரணமாக அமைகின்றது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னர் தனியார் மற்றும் நிறுவன வரி அறவீடு 70180 (718 பில்லியன்) கோடி ரூபாய்களாக எதிர்பார்க்கப்பட்ட போதும் அறவிடப்பட்ட வரிகள் 49500 (495 பில்லியன்) கோடி ரூபாய்களாகும் என்று அரச அறிக்கைகள் கூறுகின்றன. அதே நேரம் வரி மோசடிகளாக 5000 கோடி ரூபாய்களுக்கு மேல் இருப்பதாக அண்மையில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்துடன் 05 மதுபானம் தயாரிக்கும் கம்பனிகள் சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் வரிகளை செலுத்தாததால் அவற்றின் அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக அறிய முடிகின்றது. அவ்வாறாயின் இன்னும் எத்தனையோ முதலாளிமார், கம்பனிகள் என்று அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகளை செலுத்தாமல் மோசடி செய்து கொண்டிருக்கின்றன என்பது ஆட்சியாளர்களுக்கு தெரியும். அரசியல் செல்வாக்கு மற்றும் அதிகாரிகளை கைக்குள் வைத்துக்கொண்டு இவ்வாறான மோசடிகளில் ஈடுபடும் கும்பல்களே நாடு பொருளாதார ரீதியாக பாதாளத்தில் விழ காரணமாகின்றன.

பொதுவாக அரசாங்கம் மீது இருந்து வருகின்ற பாரிய குற்றச்சாட்டாக அமைவது அரசாங்கத்திற்கு பாரிய தொகை வரியை பெயரிளவிலான நிறுவனங்கள் முதலாளிமார் செலுத்தாமல் ஏப்பம் விட்டு வருகின்ற நிலையில் அவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய வரிகளை அறவிடாமல் சலுகை வழங்கப்படுவதும் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதும் நாட்டின் பொருளாதாரம் இந்தளவு மோசமாக பாதிக்கப்பட பிரதான காரணமாக அமைகின்றது. ஆனாலும் அப்பாவி பொதுமக்களை பாதிக்கின்ற வகையில் புதிய வரிகளின் அறிமுகம், அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் வகையிலான விலையேற்றங்கள் என்பன அமைந்திருக்கின்றன. குறிப்பான மின்சார கட்டண உயர்வு, எரிபொருள் விலை உயர்வு, சமையல் எரிவாயு விலை உயர்வு என்று மக்களை பாதிக்கின்ற விலையேற்றங்களால் அன்றாடம் பொதுமக்களின் தினசரி வாழ்க்கை பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் சரியான பொருளாதார திட்டமிடல் மிகவும் இன்றியமையாததாக அமைகின்றது. காலத்திற்கு காலம் அரசியல் தேவைகளின் காரணமாக மாற்றியமைக்கப்படுகின்ற பொருளாதார கொள்கையாக இல்லாமல் நிரந்தரமாக நாட்டை திட்டமிடப்பட்ட அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் இலக்காககக் கொண்ட பொருளாதார கொள்கையாக அமைய வேண்டும். அதே நேரம் பொருளாதார ரீதியாக ஒவ்வொரு தனிநபரும் ஏதோ ஒருவகையில் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் பொருளாதார நெருக்கடி என்ற பூதத்தை பொதுமக்களின் கண் முன்னாள் நிறுத்தி நிவாரணம் இல்லை என்று மக்களை மடையர்களாக்கி ஆட்சி நடத்த முடியாது என்பதை ஜனாதிபதி முதல் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும். எத்தகைய நிலையிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாக அமைகின்றது.

ஆதனால் தற்போது தொடாரும் தொழிற்சங்க போராட்டங்களை சட்டத்தின் மூலம் அடக்கி ஒடுக்க பாதுகாப்பு தரப்பை ஈடுபடுத்தி அரசாங்கம் உடனடி நடவடிக்கையாக மேற்கொள்ள முடியும். ஆனால் அந்த அடக்குமுறையின் பின்னால் மக்கள் வாழ்க்கைக்காக திண்டாடுகின்றனர். அரச ஊழியர்கள் என்ற நிலையில் ஒவ்வொரு குடும்பமும் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. அத்தகைய பாதிப்புக்களின் வெளிப்பாடே கூட்டாக வெளிப்படுகின்ற தொழிற்சங்க நடவடிக்கைகளாகும். ஆதனால் அதற்கு ஒரே தீர்வாக ரூபா 20 ஆயிரம் நிவாரணம் அல்லது சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

ஓவ்வொரு குடும்பமும் எதிர்நோக்குகின்ற பொருளாதார கஷ்டத்தின் வெளிப்பாடாக குழந்தைகள் மத்தியில் போசக்கின்மை, மன உழைச்சல், உள ரீதியான பாதிப்பு என்று பலவிதமான பக்க விளைவுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதனால் வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் அனைத்து விதமான பிரச்சினைகளையும் சரியான முறையில் புரிந்துகொண்டதாக பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான சரியான தீர்வை முன்வைக்க வேண்டிய பொறுப்பு இருந்த வருகின்றது. இன்றேல் 2024 ஆம் ஆண்டு அரச ஊழியர்களின் விரக்தி நிலையின் வெளிப்பாடான ஆண்டாக மாறுமாக இருந்தால் அதனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு மேலும் பாதிப்பு ஏற்படலாம்.

அத்துடன் 2024 ஆம் ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக அமையலாம் என்ற எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியிலும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் வலுவான நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கின்றது. ஒன்றில் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தலுக்கான அறிவித்தல் செய்யப்பட வேண்டிய ஆண்டாக அமையலாம். குறிப்பாக ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட வேண்டி இருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த 1000 கோடி ரூபாய்களை வழங்க அரசாங்கம் முன்வராததால் அந்த தேர்தல் காலவரையறை இன்றி பின்போடப் பட்டிருக்கின்றது. ஆனால் 2024 ஆம் ஆண்டும் இதே பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி ஜனாதிபதித் தேர்தலை பின்போட அரசாங்கம் திட்டமிடுமாக இருந்தால் அதுவும் மேலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் வாய்ப்பு இருந்து வருகின்றது.

அதனால் 2023 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டம் தூ ர நோக்கம் கொண்டதாக அமைய வேண்டும் என்பது பலரதும் எதிர்பார்ப்பாகும். வெறுமனே மக்களை ஏமாற்றுவதாக இல்லாமல் மக்களுக்கு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குகின்ற வரவு செலவுத் திட்டமாக அமைய வேண்டும். அதுவே பொறுப்பான ஒரு அரசாங்கத்தின் மக்களுக்கான பொறுப்புக் கூறலை சரியாக நிறைவேற்றுவதாக அமையும்.



எம்.எஸ். அமீர் ஹுசைன்

# ஊடகவியலாளர்களுக்கு கௌரவம்!



கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 01.11.2023 இல் நடைபெற்ற ஒரு கௌரவிப்பு விழாவில் ஊடகத்துறையில் சிறந்த பணியாற்றிய 10 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பணப்பரிசும் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

1980 ஆம் ஆண்டு "தினபதி" கொழும்பு நிருபராக ஊடகத்துறைக்குப் பிரவேசத்து "தினகரன்", "வீரகேசரி", ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (news.lk)பிரதம ஆசிரியராகவும் சுமார் நான்கு தசாப்கங்கள் பணியாற்றி ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் எம்.ஜே.எம் . தாஜுதீன் இந்த விழாவில் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் 68 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விழாவில் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களை கௌரவித்தார்.

இந்த வைபவத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருமதி கோபால் பக்லே மற்றும் சார்க் நாடுகளின் பிரபல ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.



இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதிலும் இடம்பெற்று வருகின்ற Level 0 வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நெறியின் ஓர் அங்கமாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளரும் இலங்கை வலை பந்தாட்ட சம்மேளனத்தின் கவுன்சில் உறுப்பினருமான SMB. ஆசாத் இனால் இப்பயிற்சி நெறி ஒழுங்கு செய்யப்பட்டு கடந்த 29 ஆந் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக உள்ளக அரங்கத்தில் இடம்பெற்றது இந் நிகழ்விற்கு வளவாளர்களாக ளு. ரெக்ஸ் அருள்நேசன் (மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர்-மன்னார்) மற்றும் MRM. ஜெஸ்மின் (மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்-மன்னார்) ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை விளையாட்டுப்பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஏனைய விளையாட்டு தொடர்பானவர்களும் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். இப்பாடநெறியின் இறுதியில் சித்தியடைந்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.





தென்கிழக்கு பல்கலைக்கழக ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டு பல்கலைக்கழக விளையாட்டுத் திணைக்களம் பல்கலைக்கழக மைதானத்தில் ஒழுங்கு செய்திருந்த மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்திற்கு எதிரான கண்காட்சி உதைபந்தாட்ட போட்டியில் தென்கிழக்கு பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணி 3:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(எம்மையெம் அஸ்ஹர்)






இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.